உ

சிவமயம்

சுப்பிரமணியசகாயம்,

மயூரகிரியாகிய குன்றக்குடி

சுப்பிரமணியக்கடவுள்பேரில்

அன்னதானமடத்துக்

குறவஞ்சி.

இஃது

பட்டமங்கலம் புதூர்.

வா. சுப்பிரமணியக்கவிராயரால்

இயற்றப்பட்டு,

மதுரைஜில்லா-பள்ளத்தூர்

மகா-ள-ள-ஸ்ரீ

அ. மு. முருகப்பசெட்டியாரவர்களால்

தேவகோட்டை

மீனலோசனி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

சோபகிருது௵ ஆவணி௴

1903

O-,191MSK2,K
N03

H8702

உ

சிவமயம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 SEP 1903
MADRAS
281

சிவசுப்பிரமணியக்கடவுள் துணை.

குன்றக்குடி சுப்பிரமணியக்கடவுள்பேரில்

அன்னதானமடத்துக்

குறவஞ்சி.

விநாயகர் காப்பு

விருத்தம்.

திருவளர் சேமநாடு திளம்வளர் குன்றைமேவு
மருமலர் வாசனை மாண்மரு மகனைகந்தன்
தருவளர் வேலர்பேரிற் றமிழ்க்குற வஞ்சிகூற
குருவளர் குகனார்முன்னோன் குஞ்சர முகவன்காப்பே

குன்றையம் பதியான்வெற்றிக் குறவள்ளி கணவன்பேரி
லென்றைக்கு முலகம்வாழ்த்த வெம்பிரா னருளால்சித்தம்
சண்டகோ தண்டனை சண்முகர் தமிழ்க்குமுன்னோன்
அண்டரும் புகழுஞான யானைமா முகவன்காப்பே

சுப்பிரமணியர்

கர்த்தனும் ஞானவேத சுத்தரானுளா மென்றும்
பத்தனர் கருணைதங்கும் பதிர்குன்றை வேலர்பேரி
வித்தனர் மகிழ்ந்த மருட்குறவஞ்சி கூற
முத்தனும் பழனிவேலன் முருகையன் காப்பதாமே

சரசுவதி

பத்தியாய்ச் சிவனார்மைந்தன் பார்வதி பாலனை
முத்தியாய் வளருங்கந்தன் முருகையன் மகிழ்த்தருஞ்
சித்தியாய்க் குறவஞ்சிகூற செகதல நிதமுற் போற்றச்
சத்தியாய் வாலமுன்னாரு சரசுவதி காப்புத்தானே

அவையடக்கம்

கல்விபெருந சமுத்திரமான கடல்சூழ் வெள்ளங்
கவியோர்கள் புவியோர்கள் கன்னுனர் பாத
நல்விதமாய் நானுதித்தே ஞுகமுன்னே
நாகேருளா ஞுதேல் போல நப்பர்தே கோழி
செல்விதமாய் மயில்முன்னே யாடுஞ் செய்கை
சென்றுருகு நேசர்குற வஞ்சிகூறல்
பல்விதமாய்க் கவியோரே பொறுப்பீ ருங்கள்
பாதமலர் பணிந்துதமிழ் பாடுவேனே

பாடினோர்பெயர்முதலியன

பெருமையுடன் பிரமாதி வருடந்தன்னில்
பேரான மகரமதி தன்னிலே தா
னுரிமையுடன் பதினொந் தேதி யன்று
உண்மையுடன் மங்களமாம் வாரநாளில்
கருமை யுடன்பூர நட்சத்ரமான
கதியுடனே பிரதமைசுப யோகந்தன்னில்
அருமையுடன் வேலர்குறவஞ்சி தன்னை
யாடினன சுப்பிரமணியன் பாடினேனே

நூல்.

விருத்தம்

செந்திருமான் மருகனென வந்த சோதி
சேவல்மயில் வாகனனைத் தியானஞ்செய்தேன்
குன்றிருந்தே ரிஷிமுனிவர் தவசுள்ளோர்க்கும்
குணமுடனே யுபதேச மருளுமூர்த்தி
மூன்றிருந்தே தகப்பனுக்கு குருவாய்நின்ற
முறையதுபோ லடியேனு மருளால்நித்தம்
வந்திருந்தே யென்னுடைய நாவில்தான்
வளர்கவிக்குத் தோடயமும் வழுத்துவாயே

தோடய தரு

வாசனைசேர் வேலவர்மேல் வஞ்சித்தமிழ்துதித்தாட
வாக்கருளு நாரணன்தான் வந்துவரந்தருவார் ௧
மங்களஞ்சேர் குன்றைநகர் கந்தையனூர் தமிழ்தழைக்க
மாநிலத்திற் கவியோர்கள் மலரடிகள் துணையே ௨
சீர்தமுடன் குன்றைநகர் முத்தையனூர் தமிழ் தழைக்க
சிந்தையிலே மகிழ்ந்துகந்த சாமிதுணை தருவார் ௩
ஆதிமுதலானசிவ சோதியருள் பாலனெனு
மாறுமுக மெனதுமன மாறுமுகந்துணையே ௪
தேனருவி நதியோடன் குமரேசர்தமிழ் தழைக்க
தேவியெனும் மாரிமுத்து நாவில்விளையாட ௫
பட்சமுள்ள குன்றைநகர்ப்பதியில்வளர் குமரேசர்
பாரில் வளர் கவிக்கெனது நாவில்வரு வாரே ௬

விருத்தம்.

அரவுயர்த்தோனுடனெதிர்த்தோன்பார்த்தன்தேரி
லருமிருந்து தேர்நடத்து மைவர்கோமான்
றரவுயர்த்தோன் செவ்வெங்கடலிற் பள்ளிகொண்டோன்
றயாளனுட மருகனெனுங் கந்தசாமி
பரவுயர்த்தோன் குறவர்குலப் பதியில் வேங்கைப்
பைங்கொடியை மணம்புரிந்த பகர் வேலன்
இரவுயர்த்தோன் குறவஞ்சித் தமிழ்க்கு முன்னு
நீமகிழ்ந்து மங்களமு நேர் சொல்வாயே

மங்களம் தரு.

சத்திவடி வேலருக்குஞ் சாமிசுப்ரமணியருக்கும்
பத்தியுடன் போற்றிசெய்தேன் மங்களம் எங்கள்
பகாசோலை மாயனுக்குஞ் செய மங்களம் (௧)

வள்ளிதெய் வயானையுடன் வாழுங்கும ரேசருக்கும்
புள்ளிமயில் வேலருககும் மங்களம் எங்கள்
புகழ்சிவனார் பாலருக்குஞ் செயமங்களம் (௨)

வீரபாகு தேவருக்கும் வில்விசய சூராருக்கும்
கூறுமயில் வேலருககு மங்களம் எங்கள்
குகனிடும்பன் கடம்பனுக்குஞ் செயமங்களம் (௩)

மாணிக்க வாசருக்கும் வளர்கும ரேசருக்கும்
ஆணிக்க னகனுக்கும் மங்களம் எங்கள்
ஆறுமுக வேலருக்குஞ் செயமங்களம் (௪)

விருத்தம்.

தோகைமயில் வாகனனைச் சரணஞ் செய்தேன்
தொழுது நமல் காரமதாய்த் துதித்து நின்றேன்
தாகமது வாய்மனது மகிழ்ந்துன் பாதம்
தானடியேன் குறவஞ்சித் தமிழ்க்கு நன்று
யேகமதாய் லோகமெங்கும் வாழ்த்த வேண்டி
யெம்பிரா னுனதருளா லெனது நாவில்
ஆகமது குறையாமல் நாவில் நின்று
அன்புடனே மனமகிழ்ந்து அகவல் சொல்வாய்

அகவல்.

சங்கர சம்போ சதாசிவப் பொருளே
பொங்கர வணிந்த புரந்தரநாதா
வேதவே தாந்த மெய்ப்பொருள் வடிவே
மாதவா முகுந்தா வாமன ரூபா
அண்ணாலை யரசே அரகர சிவனே
கண்ணுதலான கடகரி முகனே
மெய்ப்பொரு ளான விண்ணவர் தேவர்
யெப்பவும் வந்துன் னிருபதமறவார்
கார்த்திகைப் பெண்கள் கண்டுமுன் சிவனா
வாழ்த்திடக் கற்பம் வந்தவ தரித்தோன்
சரவணை தனிலே சண்முக நதியில்

அரவணி பாலன் அவதரித் திடுவோன்
ஈராறு புயனே யெம்பிரா னருளால்
ஓராறு முகமே யுன்னிரு தாளே
மறந்திலேன் புவியில் மாமந்திர மூர்த்தி
புரந்தர வேதா புண்ணிய நாதா
கற்பக முதலே காசினி யெங்கு
மற் புதமான அரகர முருகா
செந்திரு மார்பா சிவனருள்பாலா
மந்திர புயனே மாமலை நாதா
பார்வதி பாலா பன்னிரு வேலா
சூரசங் காரா சுந்தர வடிவே
யென்று நான் பணிய விருதய மதனில்
குன்றையம் பதியாய் குமரனே முருகா
யென்றைக்கு மயில்மேல் என்னெதிர் வருவாய்
சண்ட கோதண்டா சாமிமுத் தையா
சரணமுன் பாதத் தாளிணை பணிய
வருணமா மயின்மேன் வடிவேல வருவாய்
வெள்ளிமா மலையா வேலவா சரணம்
அள்ளி வெண்ணீறுதர அருள்வேல் வருவாய்
அடியுடன் குன்றைச் சுப்பிர மணியா
வடிவுடன் மயிலில் வடிவேல் வருவாய்
யென்றைக்கு மெந்தன் இருதய மகலா
வண்ணமா மயிலில் வடிவேல் வருவாய்
அரகா முருகா அருள்சிவ பாலா
வரமது தருக வடிவேல் வருவாய்
வள்ளி தெய்வானை மங்கை பங்காளா
அள்ளி வெண்ணீறு தர ஐயனே வருவாய்
அகவல் நானுரைத்தேன் அனுதினங் காவல
வரமது தருவாய் வடிவேல் சரணம்.

விருத்தம்.

மிக்கவளர் சொக்கேசர் அருளால் நாளும்
மிகமகிழு மீனாட்சி புத்ரனை
தர்க்கமில்லாக் குன்றைநகர்ப் பதியான் கந்த
சாமிகுற வஞ்சித்தமிழ் தழைக்கவே தான்
அக்கனகவீரமா காளித் தாயார்
அம்மணியாள் மனமகிழ அருகேன் றனும்
பக்கமதி லிருந்து மயிலேறிக் குன்றைப்
பதிமுதலாய் லோகமெங்கும் பவனி வாரார்

பவனித்தரு.

பவனி வாரார் ரூமரேசர்
பவனி வாரார்.

பவனிவாரார அவனியோர் போற்றிட
பதியுங் குன்றைநகர்ப் பழிக்கஞ்சி மயிலேறி — பவனி

சித்தருடன்வீரமா காளி வாழ்த்திட
சேனுபதிவீர வாகுவுங் காத்திட
சுத்தருடன்கரி போனுங் துதித்திட
சூரசங்காரனுஞ் சுப்ரமணிய ரெனும் — பவனி

கைலையங்கிரிமுதல்த் தேவா கோனுடன்
கலைதயன் பவனிகள் கண்டுமகிழ்ந்திட
அயலவே லோகமடங்கலு மீரேழும்
அனைதான முடனருள் குன்றைத் தேசிகன் — பவனி

சங்கீத மேளங்கள் தாளங்கள் முழங்கிட
சாமரையுங்குடை தானும் வழங்கிட
இங்கிதப் பெண்கள் நடனந் துலங்கிட
பொங்கும் அசுரர் மனது கலங்கிட — பவனி

மயிலேறிப் புவனமும் வானுமும் பற்றியே
மங்கள கல்யாண மயின்மேலே நத்தியே
அயிலவே லோக மடங்கலுஞ் சுற்றியே
அன்னதான மடந் தன்னிலே வெற்றியாய். — பவனி

விருத்தம்.

அரிமருகன் குகன்முருகன் குன்றைவேலன்
அன்பருக்கு அன்பனென வருளும் யோகி
பிரியமதாய் லோகமெங்குங் காட்சி தந்து
பெருமையுடன் மயிலேறிப் புனிதமாக
வரிமையுடன் முனிவர் தபோ தனர்களுக்கும்
உத்தமர்க்கு மற்றவர்க்கு முகந்து காட்சி
கரிபதிரு மருகன் வந்து குன்றைமேவி
சந்தையன் கொலுவிருந்து காட்சிதந்தார்

வசனம். சுவாமி அன்னதான மடத்தில் கொலுவீற்றிருக்கும் போது தேனுற்று விநாயகர் வருகிறவிதங்காண்க.

விருத்தம்.

தங்கநிற மேனியனார் பவனிவந்து
    தரணி யுள்ளோர்க் கதிகசெல்வந் தந்தே மூன்றும்
அங்கமுடன் வள்ளிதெய் வானைகூட
    அருகிருந்து காட்சிதரு மன்னா எங்கே
புங்கமுடன் சிவனிடத்திற் கனிகள் வாங்க
    பொங்குகடல் சூழ்புவிக ளெங்கும் வாழ்த்த
யெங்கள்பிரான் மதகளிறோன் சாளி மீதில்
    யெழுந்துகொலுச் சபைதனில் முன் வருகின்றாரே

தரு

மூஷிக வாகன கஜமுகனுங்கரி
முகவனுந் தோன்றினனே

தேசிகனருளிய ஆதியின் வஸ்துவே
தேடுதற்கரியோனே நிதம்
மாசில்லா மேனியன் குன்றையம் பதிதனில்
மான்மருகனாறு முகவேலர் முன்னிலே மூஷிக

வாசனை புரிகின்ற பூசனை யடியார்கள்
வருதுயர் தீர்த்தருளும் குற
மாதுட கணவனார் வேலவர்வளரன்ன
தான மடத்தின் முன்னே மூஷிக

அண்டர்கள் போற்றிட தொண்டர்கள் வாழ்த்திட
ஆறுமுக வேலவரும் நிதம்
குன்றையம் பதிதனில் குமரேசர் வளர்குன்றக்
குடிமலை முன்னிலையே — மூஷிக

சுத்தமாய் மனமகிழ் கர்த்தனே குகனருள்
சூரசங் காரன் நிதம்
பத்தர்கள் பணிந்திடும் முத்தையன் வளர்குன்றை
பதியது முன்னிலையே — மூஷிக

தேனூர் நதிவள சேம நாடுடையவ
செட்டிநா பூமி யெங்கும் வளர்
கோனார் மருகனும் தேனூர் விநாயகன்
குகன் வடி வேலன் முன்னே — மூஷிக

விருத்தம்.

மச்சவ தாரனை மானிடம் புகழு மாலோன்
நச்சரவின பள்ளி நாரணன் மருகன் குன்றை
கச்சணிவள்ளி மாது கணவனார் தனக்கு முன்னேன்
அக்ஷணம் பூசைசெய்ய அய்யரும் வருகின்றாரே

தரு.

பூசுரர் வந்தாரே பூசைசெய்ய
பூசுரர் வந்தாரே

பூசுரர் வந்தாரே சிருள்ள நாட்டினில்
பொன்னடி கரிமுகன் பொற்பாதம் போற்றிட — பூசுரர்

தேங்காயுஞ் சேர்த்திடத் தீபமும் பார்த்திட
தாங்காமல் வாழ்ந்திடத் தந்தியைப் போற்றிட — பூசுரர்

புஷ்பமும் வாசனை யெப்பவும் பூசனை
கற்பகமே துணை கரிமுகன்றனை நினை — பூசுரர்

சாஸ்திர நீதியைச் சன்னையா யோதியே
ஆத்திரங் கூவியே ஆனைமுன் றூவியே — பூசுரர்

சோமனுங் கட்டிட ராமமுந் தொட்டிட
பூமண மிட்டிட வாசனைப் பொட்டிட — பூசுரர்

விருத்தம்.

கருணைவளர் மிதிலையெனும் பெண்ணாள்மாது
கணவனார் மருகனெனும் கரியோன் பின்னேன்

அருணை வள்ளி பாலனென்னு மணிகனுன
அருள் குன்றைத் தேசிகனார் அமரர்கோமான்
தருணையுடன் கிழவனுரு வள்ளிக் கான
தகைமை யது கண்டுமத களிறே னக்கு
வருமையுடன் வள்ளிகை வசஞ்செய் தோர்க்கு
வளர்திய சூடாமணி வழங்கி னானே

வசனம் இவ்விதமாகக் குருக்கள் வந்து பூசை முடித்ததின்பேரில் கட்டியக்கூற வல்லிடும்பன்வருகிறவிதங்காண்க

விருத்தம்.

மட்டடன் காதபோகன் வளர்கந்தசாமி வாசல்
திட்டமதாக காறுந் தினஞ்செய மென்றே கூறும்.
துட்டரை யொடுக்கும் ஞான துரைமுருகையன் வாசல்
கட்டழகான போகன் கட்டியக் காரன் வாரான்

இதுவுமது.

மெய்யினிலே சட்டையிட்டு பூட்டிக் கெண்டை
மிசவிருது பாகுமுன் டாசகட்டி
மையினிலே விழிக்கு தாற் திலதப்பொட்டு
மாணிக்க மாலை முத்து மாலைமின்ன
பொய்யினிலே மனுவுரை யாத வாசன்
பகழ்குன்றைக் குமரேசர் பொற்பாதம் போற்ற
கையினிலே வெள்ளி நல்ல பிரம்புங் கொண்டு
கல கலெனச் சபையிற் கட்டியக் காரன்வந்தான்

தரு.

வந்தானே கட்டியக்காரன் வல்லிடும்பன்
வந்தானே கட்டியக்காரன்

வந்தான் கதிர் மறைத்தோன் வளர்மருக விருதுயர்த்தோன்
தந்தானை முகவன் பின்னோன் நம்மானைத் தான்றுதித்து வந்தா

சூராதி சூரனென்னுந் துரைமுருகையன்முன்னு
வீராதி வீர னென்னும் வில்வீரன் வாசலென்னும் வந்தா

ஆதித்திருமால் நாகர் சோதி தெய்வானை பாகர்
ஆசைவள்ளி மேல்தாக மோகிகன் பின்னோன் வாசல் வந்தா

தகப்பன் குருவுமான தாய்சத்தி வேலைக்காண
வகைப்படாக் குறவனுன வடிவேலன் பதத்தைப்பூண வந்தா

மேட்டிமையதாக மென்றும் மேன்மைவள்ளி பாகனென்றும்
காட்டிலே குறத்திபுண்டு கைப்பிடித்தோன் பாதங்கண்டு வந்தா

மங்கையர் மயங்குஞ் சாலன் மான்மருகனான வேலன்
பங்கைய முகத்தினுள்ள பார்வதியாள் பாலன் முன்னே வந்தா

சத்திவடி வேலா கேளுஞ் சஞ்சலத்தைத் தீர்ப்பாய் நாளும்
பத்தியுடன் பணிந்தென்னாளும் பன்னிருகை வேலர்வாசல் வந்தா

விருத்தம்.

கருத்தினிற் றுதிக்குங் குன்றைக் கற்பசமுதல்வன் பின்னேன்
பெருத்தினி லேறுமீச னிணையடி துதித் தென்னாளும்
அறுத்திடும் பிணிகளென்னு மாறுமா முகவா குற்றம்
பொறுத்திடு மென்று கட்டியக் காரனும் பூசைசெய்தான்

வசனம். கட்டியக்காரனை வல்லிடும்பன் சுவாமியைப் புஷ்பங்களா லர்ச்சித்துப் பூசைசெய்கிற விதங்காண்க.

தரு.

அரகராசிவ காமிபாலனே பரமஞானி
அண்ணலே குன்றைக் குமர தேசிகா அரகரா
அண்ணலே குன்றைக் குமர தேசிகா

வாமுதவிய மான்மருகனே வேங்கை மரமாய்
வந்துவள்ளி முன்னுகந்த கந்தனே அரகராசிவ
வந்துவள்ளி முன்னுகந்த கந்தனே

துன்னு கைலை யீசன்மைந்தனே குன்றையம்பதி
துதித்திட வரமுதவு கந்தனே அரகராசிவ
துதித்திட வரமுதவு கந்தனே

என்னும் பழனிமலையில் வேலவா கதிர்காமமுதலாய
ஏகமான லோக நாதனே அரகராசிவ
ஏகமான லோக நாதனே

சமணரைக் கழுவைத்த நாதனார் பாலனான
சரவணைதனில் வந்துதித்தவா அரகராசிவ
சரவணைதனில் வந்துதித்தவா

கழுகுமலையும் குன்றை முதல்வனும் செந்தூர்வாழும்
கந்தனே கழுக் குன்றநாதனே அரகராசிவ
கந்தனே கழுக் குன்றநாதனே

வந்துபணிய வரங்கள் தந்தருள் குன்றக்குடியில்
மலையில்வாழும் வடிவேல் முருகனே அரகராசிவ
மலையில்வாழும் வடிவேல் முருகனே

குந்துமயிலில் மீதிலேறியே குன்றையம்பதி
குமரதேசிகா கருணை வருகுவாய் அரகராசிவ
குமரதேசிகா கருணை வருகுவாய்

விருத்தம்

செண்பகமலருங் காவுஞ் செந்நெலுந் தேனுறுமாயும்
அன்பனுங் குன்றைவேலன் ஆறுமாமுகவன் வாசல்
இன்பமாய் வேலர்பாத மிருதயத்தினிலே போற்றி
நண்ணிய மகிழ்ச்சிகூர்ந்து கட்டியங் கூறலுற்றான்

கட்டியக்காரன் வசனம் ராஜாதிராஜன் ராஜபரமேஸ்வரன் ராஜமார்த்தாண்டன் ராஜகோலாகலன் கைலாசபதியாகிய பரமசிவன் புத்திரன் பார்வதிபாலன் வடிவேல் முருகன் வள்ளிமணவாளன் சூரசங்காரன் சுப்பிரமணியதேவன் மயூரகிரியான் வளராறுவீடான் குன்றையம்பதியான் குமாரவேற்சுவாமி வள்ளிதெய்வானையுடன் மயின்மீதிருந்து சகலதேவாதிகளுஞ் சூழ்ந்திருக்க சகலரக்ஷகரான சுப்பிரமணியசுவாமி அன்னக்கொடிகட்டி சகலபேர்களுக்கும் வினைதீர்த்துத்தர அன்னதானமடத்துக்குக் கொலுவுக்கு வருகிறார்! பராக்கு! எச்சரிக்கை! பராக்கு!!

தரு.

சுவாமிவருகிறார் பாருங்கள் புவியோரெல்லாம்
வந்தங்கே சேருங்கள்

மயிலங்கே யாடுற சத்தமே தேவர் வானவர்
பொழிகிறார் புஷ்பமே

வள்ளிதெய்வயானையுங் கூடவே வடி
வேலர்வருகிறார் பாருமே

அன்னதானமடந் தன்னிலே கந்தையன்
வருகிறார் முன்னிலே சுவாமிவருகி

விருத்தம்.

கைலைமா மலைபானிசன் கடவுள்த னருளால் நாளும்
அயிலவே குன்றை மேவும் அழகு தேனுறு நாடன்
குயிலிசை மடவார் சூழக் குறமகள் கணவன் கந்தன்
பயிலவே தெய்வானை வள்ளிபாகனும்வாரார்(கொலுமுகமாய்வேவாரார்)

தரு.

பாகனும் வாரார் தேனுகமாம் வளர்குன்றைப்
பதிவளர் குமரேசர் பழிக்கஞ்சி மயிலேறி பாகனு

நாரதர் பிரமாதி யோர்கள்பணிந்திட
நங்கையர் பலர்போடப் பெண்கள் கவிபாட
சூராதிசூரனுங் குன்றையம் பதிவளர்
சுப்ரமணிய னென்றுந் துலங்கும் பொன்மயிலேறி பாகனு

தீந்தா பராக் கென்று கட்டியங் கூறிட
கவரி சாமரைமுதல் காளாஞ்சி யேந்திட
சுந்தரன் மகனெனுங் கந்தையன் பாதத்தைச்
சுத்தமாய் நாளுந் துதித்தவர்க்கே காட்சி பாகனு

வையகம் போற்றிய குன்றுக்குடி மலை
வாழுங்கும ரேசர் நாளுமகிழ் வாசர்
சையோகமாமயி லேறி யுல்லாசமாய்
சாமிகும ரேசர் நாளுமகிழ் வாசர் பாகனு

தோகையர் வள்ளிதெய் வானைக்குக வருள்
தோந்திக் கணபதி தந்திமுகவன் பின்
வாகையாய்த் திருவேல் கையுலாவிய
வளர்குன்றைத் தேசிகன் வள்ளிமணவாளன் பாகனு

விருத்தம்.

பூமலர் வாசம்பொ ன்ற புகழ்குன்றைக் குமரர்செங்கோல்
தாமணம் புவியோர் வாழ்த்தத் தலைவர் சேனைதிருழக்
காமனும் பகழி பெய்ய கன்னியர் குடைபிடிற்ற
வாமனன் மருகன்குன்றை வள்ளலுங் கொலுவில்வாரார்

பின்னும் விருத்தம்.

அந்தரதுந்துபிகளாட அருகில் சாமரைகள்போட
சுந்தரமுருகாவென்று சமுகமாய் மறையோர்பாட
பந்தரமானதேவர் பழமையாய் ரிஷிகள்போற்ற
கந்தர்பொன்மயில்லேறி கடவுளர் கொலுவில் வந்தார்

தரு.

மூவர்முதலோர்கள் வாழ்த்த, முத்திதருஞ்சத்திவேலு
தேவதேவர் மகிழுங் குன்றைத், தேசிகனுங் கொலுவில்வாரார்
மடங்க ளன்ன தானமாக, மயிலுநடமாடி நிற்க
குடங்கள் அன்னப் பெண்களாட, கொலுவில்வாரார் குன்றைவேலர்

வள்ளியம்மை தெய்வானைகூட, வளருங்கைலாசர் மைந்தன்
புள்ளிமயில் மீதிலேறி, புகழும்வேலர் கொலுவில் வாரார்
நாகரெத்னக் கிரீடமின்ன, ரம்பையர் காளாஞ்சி யேந்த
தோகையர் கவிகள்பாட, துலங்கும்வேலர் கொலுவில் வாரார்

ஆதிசூழு முலகம் போற்றும், அன்னதான மடத்திலே தான்
வாழிசொல்லு மறையோர்போற்ற, வடிவேல்வாரார் கொலுவின்மீது
மட்டில்லாத குன்றைவேலர், வள்ளியம்மை தெய்வானைகூட
கட்டியங்கள் கூறிநிற்கச், கந்தையனுங் கொலுவில்வாரார்

விருத்தம்.

செம்பொனூஞ்சல் ரத்ன சிறந்த சிங்காசனத்தில்
அன்பனாங் குன்றைவேலர் அன்னதான மடத்திலங்கே
இன்பமாய்த் தேவர்சூழ இனியசிங்காசனத்தில்
நண்புடன் குன்றைவேலர் காதலாய் கொலுவிருந்தார்

வசனம் சுவாமி அன்னதான மடத்தில் இரத்தின சிம்மாசனத்தில் கொலுவிருக்கும் போது நடனப்பெண்கள் நடனமாடுகிறவிதக்காண்க

விருத்தம்.

வகதிக தொகுதா வென்று வளரிடைச் சேலைமின்னே
திகதிக திகெனக் கொங்கை சேயிழை நடனஞ்செய்ய
தகதிக தொகுதாவென்று தாளமத் தாளமுன்னும்
முகதிகக் குமரர் முன்னே முத்து மோகினிவருகின்றனளே

தரு.

வந்தாள் மோகினி இந்திராணிக்குயில்
மாது சவுந்தரியாள்

கந்தர் குகனருள் சுந்தர முருகனும்
காதலருள்வள்ளி நேதவான் முன்னிலே

பந்தரமான பழிக்கஞ்சி வேலர்முன்
பைங்கொடியாள் பளபள பளெனவே — வந்தா

வாசம் புகழ்க்குன்றைத் தேசிகன் சமுகத்தில்
வாழ்த் தியனுதினம் போற்றிப்பணிந்திட

நேச வல்லாசம தான குமரனே
நெஞ்சிற் றுதித்தங்கே கொஞ்சி விளையாட — வந்தா

திட்டமதாய்மனத் திட்டமுடன் கெண்டைச்
சேலைகுலிரப் பொன்னேலை பளீரிட

கட்டழகன் குன்றைத் தேசிகன் பாதத்தை
கண்டுபணியக் கலகலவென் றங்கே — வந்தா

மூக்குத் தலுக்கு முகமுமினிக்கிட
முத்துவடமுத்து மாலை யழுத்திட

தாக்குங் குடமுலை மாது குலுங்கிட
தகதகதக்தக தகதகதாவென — வந்தா

மன்னர் பணிந்திடு முத்தையன் சன்னிதி
மாநிலம் போற்று மகிழ் குன்றைத் தேசிகன்

அன்னதான மடந் தன்னிலே கந்தனூர்
ஐயன்வளர் ரத்னச் சிங்காசனத்தின் முன் வந்தா

வெற்றிமயில் வேலர் வள்ளிதெய் வானையும்
வீரபாகுவீர மாகாளித் தாயாரும்

சுற்றிய சேனை யிடும்பன் கடம்பனூர்
சூரசங் காரன் துரைகந்தன் முன்னிலே வந்தா

தேனுறுபாடி கேமநாட்டினில் வாழ்பவன்
தென்விஜயாலோகம் செங்கோல் செலுத்திய

தானுறு தீர்த்தம் சரவணை முருகையன்
தாளினை போற்றித் தகதக தா வென வந்தா

விருத்தம்.

தும்பகலை மாதுவளர் மீனாட்சி யம்பாள்
தோகைசிவ காமியுதந் துதித் தென்றநத
மெய்யெனும் கரிமுகவன் றனக்குப் பின்னேன்
அருள்வீர வாகுவுக்குத் தான்முன்னேனும்
கையனுக்கு மைத்துனனும் வேலர்முன்னுன்
கணமுடனே மன்மதனும் பகழிபூட்ட
செய்யன்ன நடையுடையாள் மோகினியுரத்ன
சித்ரசல்ல சபைநடனஞ் செய்கின்றாளே

நடன தரு

நடனஞ்செய்கின்றாள் முத்துமோகினி ரத்னசித்ர
சதிரின் முன்னிலே நடனஞ் செய்கிறாள்

மதாகிய முத்துமோகினி, தேசிகனுங்கும் ரேசர்தன் வாசலில்
ர்தநிக்திமி திந்திதா தாவென, திகதிகதிகதொகுதொகுதாவென நட

மங்கையூர் வள்ளிகணவன் குறவனூர்
மாநிலம் போற்றும் மகிழ்குன்றைத் தேசிகர்
கங்கை மகன் கந்த சாமிதன் பாதத்தைக்
கருத்தினில் நித்தந் துதித்தங்கே போற்றியே

கண கண கண க்திர் திமிர் திமியென
கனக திந்திமி திந்தி தாவென நடனஞ்

மின்னொளிவாகிய பொன்னிறம் பூண்டிடும்
மேகமதா கூந்தலாகவுமே யிளம்
கன்னல் கதலி யிடைதுடையா ளன்னம்
கண்டு நடைமகிழ் கருத்தில் மகிழ்ந்தங்கே

கரிகரி ரிரிரிரி ரிங்குடா வென
கனக திக்திமி திநதி தாவென நடனஞ்

தேசமெங்கும் புகழ்குன்றைத் தேசிகன்
தென்பழனி முருகையனைப் போற்றியே
தாசன்கவி சுப்ர மண்யன் தமிழ்க்குமுன்
தாட்சியில்லா வரந் தந்தருள்வாயென்று

தகிர்த திந்திமி திந்திதாவென
தானமத்தளங் கனீர் கனீரென நடனஞ்

விருத்தம்.

சிவசிவாசரணமுன்தாள் திருவடிபணிந்துநின்றேன்
தவசிகள்முனிவர்தேவர் தாளினை வணங்கிநாளும்
பவசிவமானகந்தா ப்ரமனையாமயோகி
உபதேசித்தென்னையாள வுன்னருள்வேண்டிநின்றாரய்

வசனம் சுவாமி சந்நிதானத்தில் நடனமுடிந்தபிறகு சுவாமி வல்லியம்மை
பணியவழைக்கிற விதங்காண்க

விருத்தம்.

திடங்களாய்க் கட்டியங்கூறு சிவவல்லியம்மா கேளும்
மடங்களி லன்னதானம் மகிழ்ச்சியதாகவெங்குந்
தடங்கள் செய்யாமலோதும் தழைத்திடச் செல்வமீந்து
அடக்கலும் அவர்மேல் செய்ய தனுக்கிரகஞ் செய்குவாயே

வசனம் அகோவாரும் வல்லியம்பா நம்முடைய பக்தர்கள் சீஷர்கள்
பெரியோர்கள்தவசிகளுக்குஒரிடையூறும் வாராமல்காத்தவாரும்வல்லியம்பா

தரு சுவாமிக்கும் வல்லியம்மனுக்கும் தர்க்கம்.

கருணைவிளக்கொளியாகிய கமலாசனத்தொளியே
(கமலாசனத்தொளியே), கந்தாவென்ற அடியார்தமைக்
காப்பாய்தம்பி யிதும்பா

(சாமி) அருணைமலை வடிவாகிய அய்யாவருள் மெய்யா
அந்திபகலுனைத்துதித்தோர் அவரிடமும் குடியாய்

(தம்பி) ஆறுபடையிலும் முதல்வான மலையாகும்
அடியார்களுஞ் சுகமோ எனக்கருளுந்தம்பி யிதும்பா

(சுவாமி) பெருகும் வளர் குன்றைநகராளுங்கந்தசாமி
பெரியோர் தவமுனிவரெல்லாஞ் சுகந்தா னய்யா சுவாமி

(தம்பி) துடியாகவே வளருங்கொடி இடியும் அன்னக்கொடியும்
(நம்மை) துதித்தோர் தம்மைக் காப்பாய் நிதம்
சுகமாகவே யிதும்பா

(சுவாமி) அடியார்மன தடியாருந்தன் அடியாரிடங் குடியா
ஆயன் மருகோனே குன்றை யாளுங்குலமானே

விருத்தம்.

கெடியது செலுத்துங்கெங்கா தரனுட திருமெய்ஞ்ஞானம்
கொடியது லோகமன்னக் கொடியது முழங்குதெங்கும்
படியது அளந்தானுந்தன் பாதமே சரணமென்று
அடியது அளந்துன்பாதம் அனுதினம் போற்றுவேனே

வசனம். சரணம் சரணமையா சுவாமி தேவரீருடைய பாததரிசன
ஞ்செய்த பேர்களுக்கும் ஆறுபடைவீட்டிற் கட்டிய அன்னக் கொடிக்கும்
பழுதுவராமல் காத்து தேவரீருடைய திருவடியில் பூசைசெய்துகொண்டி
ருக்கிறேனையா சுவாமி

விருத்தம்.

ஞாதமிழ் நிதம் வளரு நேமநாடு
மகிழுதிரு வேலவனு மகிழ்ந்தென்னுரு
சதிர் புன்ன லோகமெங்கும் கீர்த்தியான
சண்முகனும் மகிழ்ந்தன்பன் றனக்குச்சொல்வார்
யெதிரியினியாருனக்குக் கருணையாளா
யெனதன்னக்கொடிலோக மெங்குந்தோன்ற
முதிருதவம் வளரு தெய்வ லோகங்கேட்க
மூர்க்கமுடன் சேகண்டிமுழக்குவாயே

தரு.

வல்லபமான வளர் குன்றை வேலவன் கண்டு தான் இந்த
வைய கமெச்சிய வல்லிடும்பா புவி சென்று தான்

அல்லவர் போற்றிய ஆறுபடைவீடுஞ் சேருமே புவி
அட்டாள தேசம் மலைமுதல் நாடெல்லாங்கூறுமே

பாருடன் அன்னக் கொடிகட்டி யாடவே நேருதே சுவாமி
பாதம் பணிந்தோர்கள் பாவவினை யெல்லாம் போகுதே

பேருடன் குன்றை நகரன்னமாமடந் தன்னிலே நாமும்
பெருமையா யன்னக் கொடிகட்டியாடுது முன்னிலே வீர

சேகண்டி யோசை சிலாக்கிய மாக நிகழ்த்துவாய் புவி
சென்று முனிவர்கள் கண்டுமகிழவே வாழ்த்துவாய்

விருத்தம்.

இடமுடனே குன்றைநகர்ப் பதிவேற் கந்தன்
இயாளனுமே மனமகிழ்ந்து இதமதாக

நடமிடு செங்கருணைபுரி யிடும்பா நாமும்
நலமுடைய அன்னமட மடத்திலே நான்
மடல்விழியாள் வள்ளிதெய் வானைகூட
மகிழும் அன்ன மடத்திலன்ன தானஞ்செய்ய
கடல்சூழ் மீரேழு லோகங்கேட்கக்
கனமுடனே சேகண்டி முழக்குவாயே

வசனம் வாருந்தம்பி வல்லிடும்பா நாம் ஆறுபடைவீடுகளில் கட்டிய அன்னக்கொடிக்கு இந்தக்குன்றையம்பதியாகிய தலத்தில் அன்னதானஞ்செய்யவேண்டியிருப்பதால் நம்முடைய அன்னக்கொடியை தெய்வலோகபரியந்தம் தெரியக்கட்டி ஈரேழுபதினாலுலோகமும் கேழ்க்கும்படி வீரசேகண்டிச்சத்தம் முழக்குவாய் தம்பி

விருத்தம்.

மான்மருகன் பாதமது போற்றி செய்து
மலரடியில் புஷ்பமலர் மாலை சாத்தி
பால்பழமுந் தேனுடனே யமுதுசெய்ய
பன்னிருகை வேலர்சொல்லப் பணிந்தே நின்று
கோலமயில் வாகனர்செய் யன்னதானம்
குருபரர்க்கும் பார்வதிக்கும் குறித்தென்றாரும்
வேலவனே துணையெனவல் லிடும்பனங்கே
விளங்கினார் சேகண்டி முழங்கினாரே

வசனம் சுவாமி சொன்ன உத்திரவுப்பிரகாரம் வல்லிடும்பனானவன் அன்னதானமடத்தில் அன்னக்கொடி தெய்வலோகபரியந்தம் தெரியக்கட்டி ஈரேழுபதினாலுலோகமும் கேழ்க்கும்படி வீரசேகண்டிச் சத்தம்முழக்கும்போது வள்ளியம்மை தெய்வானை யிருவரும் வந்து சுவாமியைப்பணிந்து சுவாமி ஆறுபடைவீடுகளிலும் மற்ற மலை நாடுகள்தோறுங்கட்டிய அன்னக்கொடிக்கு இந்தக் குன்றையம்பதியில் அன்னதானமடத்தில் அன்னக்கொடிதெய்வலோகபரியந்தம் தெரியும்படியாய் கட்டியும் ஈரேழுலோகமுங் கேழ்க்கும்படியாய் வீரசேகண்டிக் சத்தமுழக்கும்படி உத்தரவாச்சுதே இந்த மலையினுடைய வளமையை அடியேன்களுக்குத் தெரியும்படி உத்தரவாகவேணும் சுவாமீ

விருத்தம்.

இனமகிழ்தெய் வானைவள்ளி தெய்வேந்திரன் மகளே பெண்ணே
மனமகிழ்ந்துனைக் கல்யாணம் மங்கையே மாலை சூட்டி
கனமகிழ்ந் தெங்குநாளும் கந்தனார் கதிர்வே லென்று
தனமகிழ்ந் திருக்குங் குன்றைத் தலமது வளஞ்சொல்வேனே

வசனம் அகோவாருங்கள் பெண்களே உங்களிருவரையும் கலியாணஞ்செய்தும் திருமெய்ஞ்ஞான சத்திவேலனென்றும் பேராகி, இந்த ஆறுப

கைலிநொளிரும்மிவ்வியாடி குன்றையம்பதியாயிருக்கும் வந்தோமல்லவா இந்த ஸ்தலத்தினுடைய வளங்களைச் சொல்லுகிறேன் கேளுங்கள் பெண்களே

தரு.

வடிவுள்ளதெய்வானை வள்ளியையிவாமனை மங்கைமாரேகுன்றை
வளமதுளன்னுட வாக்கினுற சொல்லுவேன் மங்கைமாரே

(சாமி) அடியுடன்வளர்கிவசந்தரன்மகனைனுங் சாமிநாதா மனம்
இலக்கமாய்காண்கேட்கத்தாதிர்த்துசொல்லுவீர் சாமிநாதா

(பெண்ணே) ஆதியில்சேரனுமலையிவலிதுமங்கைமாரே திரு
மாலென்றுவந்தன்றுபேர்குன்றையமலையிது மங்கைமாரே

வசனம் அம்மா கேளும் பெண்களே ஆதியில் சேரநாமமலை, மயில் மலை, தங்கமலை யென்றும்பெயர் அந்த மகாவிஷ்ணுவானவர் இந்தமலையில் வந்ததின்பேரில் குன்றையம்பதியென்று பேருண்டாயிற்று பெண்களே

தரு.

(சுவாமி) நீதியாய்மைவருகைடமாலிங்கேவந்ததேன் சாமிநாதா என்ன
நெறியுடன்வளர்குன்றைப்பதிகளில்வந்தாரேன் சாமிநாதா

வசனம் எதுகாரணமாக அந்த மகாவிஷ்ணு இக்குன்றையம்பதிக்கு வந்தார் சுவாமி

தரு.

(பெண்ணே)மனமிகுந்தகோபஸ்திரீயர்பதினறுபிர மங்கைமாரே ஒரு
மங்கைக்குச்சந்ததிவரம்வாங்க வந்தாரே மங்கைமாரே

வசனம் கேளும் பெண்களே அந்த மகாவிஷ்ணு ஆயர்பாடியில் நந்த கோபன்மனையில் வாழுநாளையில் அவருக்குப் பதினறுயிரங்கோபஸ்திரீகள் உண்டு அவர்களில் ஒருத்திக்குக் குழந்தையில்லை உடனே சிஷ்ணுமூர்த்தி யிடம்போய் அதின்காரணங்கேட்டாள் அவர் நம்முடைய இந்தஸ்தலத்தில்வந்து சப்த-நாள் சட்டிவிரதம்பிடித்தால் குழந்தையுற்பத்தியாகுமென்றார் அப்படியே அவரும் விரதம்பிடித்தார் உடனே நாமும் அப்பெண்ணுக்கு பிள்ளைவரங்கொடுத்தோம் அதினல் அவர் சந்தோஷப்பட்டு இன்றைக்கும் நீர் அன்னக்கொடிகட்டிக் குன்றக்குடியாய் வாழக்கடவாய் என்று சொல்லிப்போனர் அதினல் இந்தஸ்தலத்திற்குக் குன்றக்குடியென்று பேர்வந்தது பெண்ணே

தரு.

குணமுடன்மாயவன்குறித்திங்கேவரம்பெற்றால் சாமிநாதா
குன்றக் குடிமலைகைலாசமுடியிலெனிகராகுங் சாமிநாதா

வசனம் அந்த மகாவிஷ்ணு இந்தமலையில் வரம்பெற்றால் இதை கைலாசமலையென்று தேவரீர்வாக்கால் உத்தரவாகவேணும்

தரு.

நாகமாக்குன்றையில்சரவணப்பொய்கையும் மங்கைமாரே அன்ன
தானமுமடத்தினிற்காணலாம்பெரியோரை மங்கைமாரே

வசனம் பெண்களே சகலமான ரிஷிகளும் பெரியோர்களும் நம்முடைய சரவணப்பொய்கையில் தீர்த்தமாடி நம்முடைய அன்னதானமடத்தில்பூசை போஜனம் செய்கிற வேடிக்கையைக்கண்ணாலே பாருங்கள்

தரு.

ஏகமாத்தேனாறிதாவளஞ்சொல்லவீர் சாமிநாதா புவிக்
கென்றுமே அன்னக்கொடிகட்டியாடிய சாமிநாதா

வசனம் சுவாமி குன்றையம்பதியாகிய இந்த தலத்தின் மகிமைகளைக் கேட்கக்கேட்க அதிக ருசியாக இருக்கின்றது இனி அந்த தேனாற்றின் சரித்திரத்தையடியேனுக்குச் சொல்லவேணும் சுவாமி

தரு.

தக்ஷணமூர்த்திருமேஆடியாதீர்த்தமாம் மங்கைமாரே அன்று
தேவர்கள்வந்தங்கேதீர்த்தங்களாடுவார் மங்கைமாரே

வசனம் "தக்ஷணாமூர்த்தியும் ஆதிமகாவிஷ்ணுவும் நம்மிடத்தில் வரம்பெறவந்தபோது அந்தத் தக்ஷணாமூர்த்தியை நம்முடைய சரவணப்[illegible]கையில் தீர்த்தமாடுமென்றேம் அவர் நம்முடைய ச[illegible]தியாகவேணுமென்றார் நாமும் மதுவீசரிடத்திலபோய் இந்தத்தேனாற்றை வரவழைத்துக்கொடுத்தோம் உடனே அ[illegible]தேவர்களும் அதில் தீர்த்தமாடினார்கள் அதினாலே தேனாறு என்று அதற்குப்பெயர் பெண்களே

தரு.

பச்சைமால்மருகனே பன்னிருகைவேலாய் சாமிநாதா சூர
பற்பனைச்செயித்திடும்பழமையிங்குரைத்திடும் சாமிநாதா

வசனம் சுவாமி! தேவரீர் சூரபத்மனை எந்த ரூபத்தோடு செயித்தீர்! சொல்லவேணும் சுவாமி

தரு.

சத்திவேல்கையினில் தான்பிடித்தேகினேன் மங்கைமாரே சூரன்
தன்னையே அசுரகுணத்தனைவதைசெய்திட மங்கைமாரே

வசனம் பெண்களே! சூரனைச்சங்காரஞ்செய்வதற்காக நாமும் கையினில் சத்திவேல் பிடித்தேகினேம் பெண்களே

தரு.

பத்திபாயவனிங்கேபரிவுடன்வருவானென் சாமிநாதா அவன்
பட்டணம்விட்டிங்கேபாங்குடன்வந்ததேதென் சாமிநாதா

வசனம் அவன் பட்டணமும் கோட்டையும் விட்டு இந்தப் பூமியின் கண்வருவானேன் அதைச் சொல்லவேணும்

தரு.

சூரனுஞ்சென்றிங்கே சோக்கேசாவென்றவல் மங்கைமாரே மிருள்
துணையடிபோற்றிடச் சூரனிங்கர்வந்தான் மங்கைமாரே

வசனம் அந்த சூரன் மீறுகதிசக்கரசேல்வனாரை நோக்கித்தவசுபண்ணிசகலவரமும் பெற்று ஸ்முடனே போர்புரியவேணுமென்று எண்ணி இந்த இருண்ட ஆரணியமானகாட்டில்வந்து தவசுசெய்தான் அந்தயிடந்தான் சூரப்பதியென்னும் நகரந்தான் பெண்ணே.

தரு.

வீரவும்பூசிக்கமீனவள்வாசகில் சாமிநாதா என்ன
விதமுடனிங்கே இதமுடன்வந்தீரோ சாமிநாதா

வசனம் அந்த சூரன் அந்தக்காட்டில் தவசுசெய்யும்போது தேவரீர் எந்தருபத்தோடு அவனைச்செயித்தீர் சுவாமி

தரு.

வேல்கையுடன்திருவேலென்றுவந்தேனென்பார் மங்கைமாரே அன்று
விண்ணவர்திருவேலர் அந்நகர்பேரிட்டார் மங்கைமாரே

[illegible]னம் பலதேவர்கள்கூடியதாற் பல்லநகரென்றும், தேவர் மாலை [illegible]ட்டது, மாலையிட்ட [illegible]ன்றும், தெய்வப்பெண்கள் ஆரத்தி யெடுத்தது ஆலத்திநகரென்றும் நாமும் [illegible]யில் வேல்பிடித்து நின்றவிடம் திருவேல்நக ரென்றும் பேரிட்டார்கள் பெண்களே

தரு.

மால்கையன்காவலும் வடபத்திரகாளியும் சாமிநாதா திரு
வாழ்நகர்தனில்முக்யமாகவேவாழ்வோர்கள் சாமிநாதா

சூரனைவென்றுநாம் பேருடன்வாழ்ந்தேனென்பார் மங்கைமாரே குன்றை
சூழ்புவிதனில்மூவர் வாழ்வோம்நாம்எந்நாளும் மங்கைமாரே

வீரவேல்திருவேலுநாதனைப்பெருமானே சாமிநாதா இந்த
விண்ணுள்ளகாலமுமெந்நாளும்வாழ்வோம்நாம் சாமிநாதா

விருத்தம்.

மங்கையின்மயிலேகண்ணே வடிவுள்ளமாதேபெண்ணே
கொங்கையினழகின்றேனே கோதைதெய்வானைவள்ளி
சங்கைசூழுலகமெங்கும் காத்துநாம்புவிகள்போற்ற
செங்கைவேலெடுத்துக்குன்றை சென்றுநாம்பதியில்வாழ்வோம்

வசனம் கேளுப்பெண்களே! இந்த ஆறுபடை வீடுகளைக் காட்டிலும் முக்கியமாய் இந்தக்குன்றையம்பதியிலும் திருவேல்நகரத்திலும் இருந்தா மூவர்களும் விளையாடிக்கொண்டிருப்போம் பெண்களே

பொது வசனம்

பின்பு சுவாமி அன்னதானமடத்தில் அன்னதானஞ்செய்கிற வீரகே ண்டி யோசைகேட்டு ஆகாயமார்க்கத்திற்போகிற நாரதமுனிவர் வருகிற விதங்காண்க

விருத்தம்.

வீரனார்குன்றைவேலர் விண்ணவர்முனிவர்கூட
சூரனையட்டகீர்த்தகந்த சுவாமியுங்கொலுவிருக்க
காரணமானயோகி கந்தனார்சபையின்முன்னே
நாரதமுனிவர்தானும் நலமுடன்வருகின்றாரே

தரு

வந்தார்சபைகள்தன்னிலே நாரதமுனி
வாராரே வேலர் முன்னிலே
வந்தார்சபைகள்தனில் கந்தர்கொலுவிலெதிர்
சுந்தரனருள்சிவ கந்தனேதுணையென வந்தார்

புலித்தோலுங்கையிலெடுத்தார் மரவுரியும்
பூட்டிமேலெவெண்ணீறுந்தரித்தார்
செலுத்திடும்வேலவா தாதித்தேதனைவென
தினமகிழ்வளர்வள்ளி மனோகராகாவென வந்தார்

தோகைவள்ளிதன்னைக்கூடிய வேலரிடம் [illegible]
சொல்லியபுனத்தைநாடியே
வாகைபதாம்மலர் தோகைபாடிய
வள்ளிமணவாளன்வாசல்முன்னாடியே வந்தார்

மங்கைவள்ளிதன்னைச்சேர்க்கவே வேலரிடம்
மடலெழுதிக்கைக்கொடுக்கவே
அங்கவர்மகிழுமனதன்புடனேயெனையாள
இங்கிதமதானகுமரேசனேசரணமென வந்தார்

விருத்தம்.

மெய்ப்புடன்குன்றைவேலர் மேன்மைசேர்கொலுவின்முன்னே
செப்பமாய்முனிவர்சூழச்சிறந்தசிம்மாசனத்தில்
நற்பதமானயோகிநாரதமுனியைப்பார்த்து
அற்புதமானலோகத்ததிசயஞ்சொல்லுவாயே

விருத்தம்.

சத்தியின்வடிவேலூர்தன்தாளிணைசரணமென்று
பத்தியாய்ப்போற்றிகிற்கபன்னிருகைவேலர்சொல்வார்
வெற்றியாய்ப்புவனமெங்கும்வேதன்மாலரனார்விண்ணோர்
எத்திசைலோகமெங்குமெங்குமேசுபிட்சந்தானே

வசனம் அகோகேளும் நாரதமுனியே தெய்வலோகம் பிரமலோகம் கைலாசம் வைகுண்டம் ஈரேழுபதினாலுலோகமும் சகலமானரிஷிகளும் பெரியோர்களும் நீரும் சுகமோசொல்லும் நாரதமுனியே

தரு.

நாரதமே கனமா புவிவளர்யாவர்களும் சுகமா.

அந்தச்சாரசமும் பார்ப்போம் அடியார்கள்
தன்னை நிதங்காப்போம்
அகோ கேளுங்களய்யா சுவாமி

வேலுமயிலோனே குன்றைநகராளுங்குலமானே புவி
நாளும்வளர்வோரும் (தேவரீர்) பாதமறவாரும்
அகோ கேளும்பிள்ளாய் நாரதமுனியே

தேவர்க்கிடுக்கமது லோகமெங்கும் யாவர்கொடுப்பதுண்டோ அதை
மூவரிடங்கூறும் அன்பருட பாவவினைதீரும்
அகோ கேளுங்களய்யா சுவாமி

சொல்லுமொழிவருவார் அடியார்கள் நல்லவழிபெறுவார் நிதம்
கல்லுங்கரைவாக்கும் கிழுகுமகை கந்தாநினைந்தோர்க்கும்
அகோவாரும்பிள்ளாய்நாரதமுனியே

[illegible]ம் குறமகள் மாதுடமெழுதும் நீர்
ஆரிடஞ்சென்றாலும் முனியேயுன்றன் பேரெங்குமுண்டாகும்
அகோ கேளுங்களய்யா சுவாமி

செந்திநகரானே திருவடி வந்துபணிவேனே நிதம்
முந்திபதேவர்களும் முனிவர்கள் வந்தேபூசைப்பணியும்
அகோ கேளும்பிள்ளாய் நாரதமுனியே

காவல்தினம்பார்க்கக் குறமகள் கண்டுபுனங்காக்க நீயும்
ஆவலுடனடந்தே தூரவழி தாவிமிகத்தொடர்ந்தே
அகோ கேளுங்களய்யா சுவாமி

கண்டவதிசயமும் புவியெங்கும் சென்றுநான்பார்த்துவந்தேன் இந்த
அண்டமுதலோரும் குமரேசாவென்றே தொழுவாரும்

விருத்தம்.

தென்பதாய் வளருங்குன்றைத் தேசிகாபுவனமெங்கும்
அன்பதாயுனது பாதம் அடியிணைமறந்தாரல்லர்
துன்பமுங்கிடையாதெங்குந் துகரமுருகையாவுன்னை
நம்புவோரிடஞ்சல்தீரும் நாதனே சரணமையா

வசனம் அகோ வாருங்களய்யா சுவாமிலோகாதிலோகமெல்லாஞ்சுற்றி

வந்தேன் தேவரீருடைய பாததரிசனஞ் செய்கிறபேர்களேதவிர வேறில்லை. அவர்களுடைய இடைஞ்சல்களைத் தீர்த்துக் காப்பாற்றவேணுமையா சுவாமி

விருத்தம்.

சுந்திரக்குமரனங்கு தொழுதிடுமன்பே சுத்தம்
அந்தமாய்ப்புவிகளெங்கும் அன்னசாலைமுதன்மையாக
நந்தனவனமுந் தோப்பும் நலமுடன் தெய்வபத்தி
பந்தமாம்புவியில்யாவர் பகர்ந்திடுமுனியேயென்றார்

அகோ வாரும்பிள்ளாய் நாரதமுனியே லோகத்திலே அன்னதானம் சொர்ணதானம் கோவில்குளம் தேர்திருவிழா நந்தவனம் பூஞ்சோலை தடாகம் வாவி சகலமும் உண்டாக்கித் தருமசிந்தனை குறையாமல் தெய்வபத்தியாயிருக்கப்பட்டபேர்கள் அநேகம் பத்தர்களல்லவா அவர்களுடையபத்திகள் தெரிந்தால் நமக்குச் சொல்லும்பிள்ளாய் நாரதமுனியே

விருத்தம்

நித்தமாய்க் குன்றைவாழுஞ் சிவசத்தி பாலா கேளாய்
சுத்தமாய்த்தேசமெங்குஞ் சூழ்ந்திடும்புவியிலே தான்
பத்தர்கள் குறவர்சாதி பாங்குடன் குழுவன் சிங்கன்
வர்த்தனைப் பூசை செய்யங்கனமுடன் சிங்கிதானே

வசனம் அகோ வாருங்காணய்யா சுவாமி தேசமெங்குஞ் சுற்றிவந்தேன் சகலபத்தர்களிலும் அதிக பத்தர்களாயிருக்கிறபேர்களில் வேழமலை சோலைமலைக் குறவர்களில் நம்முடைய வள்ளியம்மைவளருஞ்சாதியில் தெய்வக்குறக் குலத்தில் குழுவனென்றுஞ் சிங்கனென்றுஞ் சிங்கியென்றும் மூன்றுபேர்கள் அதிகபத்தர்களய்யா சுவாமி

விருத்தம்

கூறுடன் குறவனென்றால் குறிகுணமநேகமுண்டு
சீருடனமது பக்கல் சென்றவர்பணிந்தாராகில்
மேருடன் கனதையாக மேன்மைகள் செய்வோம்பாராய்
ஆருதான் எவர்களாகில் அடியவர்காப்போம்பிள்ளாய்

வசனம் அகோ வாரும்பிள்ளாய் நாரதமாமுனியே நீ சொல்லுகிறது எப்பவும் பொய்ப்போகாது அதுயேதென்றால் எக்குலத்தோராகிலும் அடியார்களாயிருக்கிற பேர்கள் நமதண்டையில் வந்தால்நாமும்சகலபாக்கியமுங் கொடுத்து நம்முடைய வாசலில் வைத்துக் கொள்வோம்பிள்ளாய் நாரதமாமுனியே

தரு.

நேசமெங்கும்புவி யாவரன்பரென வுண்டுகிதமுண்டு மன
இட்டமானசிவ பத்தரானபேரைக் கண்டு இங்கே கண்டு
அகோவாருங்காணய்யா சுவாமி

கண்டுகூறுமெனச் சென்றுகூறிய தேனு சத்திவேறு சிவன்
கர்த்தன்பாதமதைச் சித்தம்வைத்தவரை ஆரு கீரம் ஆரு
அகோ வாரும்பிள்ளாய் நாரதமாமுனியே

ஆருமென்றுசொல்லிஇங்காளுமுரைத்துவந்தமுனியே நாரதமுனியே
எந்தன் அருமையானகுறமகளைக்காணவைத்தகனியே மதுரக்கனியே
அகோ கேளுங்கொய்யா சுவாமி

கனியதானகுறமாதுபாதுசன மானும் அதுவாகும் உங்கள்
கமலபாதம்படிய வருவார் குழுவன் சிங்கன் ஓரும் வரவோரும்
அகோ கேளும்பிள்ளாய் நாரதமுனியே

ஓருமென்றகுற சாதிவள்ளிசனமானால் அதுவானல் அந்த
உவகையானகுற மகளைப்போலப் பார்ப்பேன் நானும் மனதானும்
அகோ கேளுங்களய்யா சுவாமி

மானும் பெற்றரிஷி மாய்கையாலேயந்த மாது இந்தமாது எடுத்து
வளர்த்ததாலே குறச் சாதியென்று மகிழ்ந்தோதும் அதையோதும்
அகோ கேளும்பிள்ளாய் நாரதமுனியே

ஓருமென்றகுற மாதுதன்னையண்டி னோர்கள் புவியோர்கள் எவ
ரானஅன்பர்வந்தாலுங் காப்போம் நிதங்கூர்கள் மனக்கூர்கள்

விருத்தம்.

சித்தமாய் லோகமெங்குஞ் சிவசெந்துள்ளவெல்லாம்
பத்தனுமென்றுவந்தால் பன்னிருகைவேலர் காப்பார்
சுத்தமாய் மகிழுலோகத்துளாமுருகையர் வாக்கால்
கர்த்துனு முனைத்துக் குன்றைக் கந்தனுங்கொலுவிருந்தார்

வசனம் அகோ வாரும்பிள்ளாய் நாரதமாமுனியேஅப்பேர்ப்பட்டகுழு
வன் சிங்கன் சிங்கியானால் என்றைக்கும் நம்முடைய குன்றைநப்பதியில் அன்
னதானமடத்தில்வைத்துக்கொள்வோம்எக்குலத்தோராகிலும்நார்ப்பதுநிசம்
அவர்கள் மூவரையும் நம்முடைய குன்றையம்பதியிலுள்ள அன்னதானமடத்
துக்குவரச்சொல்லும்பிள்ளாய் நாரதமாமுனியே

விருத்தம்

புவனங்களெங்குஞ் சுற்றும்புரவலன் முனிவன்தானும்
கவனமாய்க் குழுவன் முன்னே கண்டுவந்துரைத்துவிட்டு
தவனமே தீர்க்குந்தெய்வத்தலைவர்களுடனேகூடி
மவுனமாய்ப்பூசைசெய்யமா முனிதானிருந்தார்

வசனம் நாரதமுனியும் வேழமலை சோலைமலையில்சேர்ந்து குழுவன்சிங்
கன் சிங்கியிடம் சகலசேதியுஞ்சொல்லிப்போட்டுதெய்வலோகஞ்சென்றுசகல
மான ரிஷிகளுடன் பூசைசெய்துக்கொண்டிருந்தார்

விருத்தம்,

குன்றுடன் மலையின் வேலன் குருபரன் கொலுவிலங்கே
கண்டுமே மகிழ்ச்சியாகக் கட்டியக்கூறும்போது
பண்டுமொமாலைமுந்துப் பச்சைநல்லடமுஞ்சொட்டு
சிண்டுமாமணியுங்கட்டி சித்திரக்குழுவன் வாரான்

விருத்தம்

கஞ்சனைவென்றமாயோன் கரிமாலருளாலென்றும்
பஞ்சவர்தருமர்பின்னோன் பகர் பலவீமன் போலே
அஞ்சலென்றருநற்குன்றையருள் குமரேசன்முன்னே
செஞ்சணஞ் செகணமென்று சித்திரக்குழுவன்வந்தான்

வசனம் நாரதர்சொல்படி சித்திரக் குழுவனானவன் சகலவித புஷ்பஜாதி களையுந்தலைமேற்கொண்டு குன்றைப்பதியிலுள்ள அன்னதானமடத்திலசுவாமியை பாததரிசனம் பண்ணு முறைவிதந்தான்

தரு.

சித்திரக்குழுவனானே முத்தையன் வாசல்
சித்திரக்குழுவனானே கந்தையன் வாசல் சித்திரக்

சித்திரக்குழுவன் நானே கர்த்தனருள் யோகவானே
பத்திதருங்குன்றை நகர் முத்தையனூர்வாசல் வாழுஞ் சித்திரக்

ஆதிகணேசமைகன் சீதிபுலகிலெங்கும்
ஓதியகுன்றைநகர ராதிபதியான் வாசல் சித்திரக்

வாசன்தமிழ்க்கருளு நேசன்புவியில்ப்பிர
காசன்குன்றைக்கும் ரேசனுல்லாசன் வாசல் சித்திரக்

தாக்குமடியார்வினை போக்குந் திருவைபதர
நோக்குமெலிபென் முகம் பார்க்கும் வடிவேல்வாசல் சித்திரக்

நேசன்பழனிமுரு கேசன் கதிர்காம
வாசன் குன்றைக்குமரேசன் பதியில்வளர் சித்திரக்

வல்லிமகனிடம் சொல்லிவினைகள்திர
அள்ளிவெண்ணீறுதரும் வள்ளிருகனுஞ்வாசல் சித்திரக்

உண்டு மதனாம்பு கண்டுமே பெண்கள் மையல்
கொண்டுமிடைவிடாமல் என்றும் வரங்கள்பெறச் சித்திரக்

கூடமயில் நடமாட வினைகள்பறந்
தோடப்புவியோரென்றுந் தேடவரங்கள் தரும் சித்திரக்

வேதன் அணுவுமற வாதன் ரிஷிமுனிவர்
நாதன் கருணைவளர் நீதன் முத்தையன் வாசல் சித்திரக்

சேவல்வடி வேலதில் தாவ சூரனவன் கூவ
குன்றைநகர் மேவ வுல்லாசனே வாசல் சித்திரக்

விருத்தம்.

சித்திரமண்டபவுல்லாசனும் தேவர் சேனைத்தேவனை
சத்துருசங்காரவேலு சண்முகன் தாளைப் போற்ற
பத்திரம்வில் வந்தும்பை பரிமளப் பன்னீர் சாத்தி
உத்தரந்தருவாய்குன்றைக் குருபராசரணம்போற்றி

வசனம் அன்னதானமடத்தில் கொலுவிலிருக்கிற சுப்பிரமணியசுவாமி பாதகமலத்தில் மல்லிகைமுல்லை இருவாட்சி முதலியமலர் கொண்டு குழுவனைவன் பூசைபண்ணுகிற விதங்காண்

பூசைத்தரு

ஆதிபருவெனுஞ் சோதிசுடரொளி அன்னைமலைபார்வதியாள் அருள்
நீதியதாகிய வேலவாயெந்தனை நேசித்தாள் அன்வாயே

சாமி, கண்ணன் மருகனே கற்பகன் பின்னவா கார்த்திகைபாசரணம்
மனை, தென்னன் பெண்ணைப்படிக்கு வரந்தரும் மேகபராபரனே

சாமி, காளகண்டர் சிவ சம்போசதாசிவன் கர்த்தன் கருணைதங்கும்
அருள், நீலகண்டர்க் குபதேசங்கள் செய்திடும் நித்தியகல்யாண

பாலாபழிக்கஞ்சி வேலாபழனிப் பரங்குன்றில்வாழ்பவனே
யெனை, ஆளாகவேண்டியே கோலமயிலேறும் ஆறுமுகவேலா

சாமி, வாதாடும் வள்ளியை யேகாசனத்தினில் வைத்திடும்மால்மருகா
உன்றன், பாதாரவிந்தம் பணிந்தேன் கிருபைதா பன்னிருகைவேலா

சாமி, கஞ்சனை வென்றிடு மால்மருகா குகா கார்த்திகேயா கடம்பா
நிதம், வஞ்சனைதீர்த்தென்னை யாளாக்கிரெட்சிப்பாய்வள்ளிமணவாளா

சாமி, வள்ளிதெய்வானை யுடன்மயிலேறியே வானவர் போற்றிடவே
நிதம், அள்ளிவெண்ணீறுதரப் புள்ளிமயிலேறும் ஆதிபராபரனே

சோலைபுஞ்சூழ்குன்றை மேவும் புளியெங்கும் தோன்றுங்குருநாதா
கவி, வாலசுப்பிரமணியன்தமிழுக்கு முன்னிற்பாய்வடிவேல்குமரேசா

என்னுளமுன்பாதம் நெஞ்சில்மறந்து இருந்திலேனெப்போதும்
வளர், உண்ணாமுலையாள்தன் பாலனே வேல்வா உன்பாதமேசரணம்

வையகம்போற்றிய குன்றக்குடிமலை வாழுங்குமரேசா
என, தையனே வேல்முருகையனே மாணிக்க அப்பனே நீதுணையே

விருத்தம்.

குன்றுடன் மலையான் வெற்றிக் குறவள்ளிமணவன்பாசம்
கண்டோன் மகிழ்ந்துபோற்றிக் கர்த்தனே கதிர்வேலென்று

பண்டுரோகத்தைக்கன்று பகருபதேசம்போல
என்றினி காப்பாயுந்த னிணையடி சரணமையா

வருணம் சரணஞ் சரணமையாவென்று குருவானவன் சுவாமியினு டைய பாதத்தில் பூசைபண்ணினபிறகு சிங்கனானவன் வருகிறதின்காண்க

விருத்தம்.

தாசனேசரணமென்று தாளிணைபணிந்துபோற்றி
நேசமனதிலெண்ணி நேர்பச்சைவடமுங்கட்டி
பூசனைக்காப்பாகி பூட்டிபெருவலைத்தொட்டு
வாசனைவடிவேல்முன்னே வங்கணச்சிங்கன்வாரான்

விருத்தம்.

மாதிலங்கள் மகிழ்திலக ஜெயப்பொட்டும்
மாறிவித்தை கூறுவித்தை மந்த்ரவித்தைக்
காணிலவசன் வேட்டைசெய்யும் கண்ணிகூசா
கரிக்கொம்பு கரிச்சொம்புங் காடைத்தட்டும்
வாணிலங்கக் குப்பிகட்டி வெண்ணீறுசாத்தி
வளர்விடைசல் லடமதுவும் வரிந்துதொட்டு
தாலிலங்க வெடித்தசிங்கன் மருகன்பாதம்
துணையடியைப் பணிந்துசிங்கன் வருகின்றானே

தரு.

வங்கணச்சிங்கனும் வந்தானே வடிவேல்வாசல்
வங்கணச்சிங்கனும் வந்தானே

கங்கைகுலகமெங்குங் காத்திடும் புவியின்வேலுக்
கன்னிவள்ளி மணவாளா காத்தருளிவ்வேளைபாலா வங்கணச்

முத்தமிழ்சேர் கர்த்தனசபே சங்கினங்கள்
முழங்குது தேனுறு நிகரே

பத்தர்பரிபாலனென்னு முத்தையனார் வாசலெங்கும்
பதியில்வளர் சிங்கனென்னும் புவியோர் நிதம்போற்றுமெங்கும் வங்க

தேசமெங்கும் போற்றவருவான் வடிவேல்பாதம்
தெரிசனந் தந்தோரை மறவான்

பூசனைசெய் குன்றைநகர் புகழ்குமரர்வாசல் முன்னும்
வாசனையாய் வேலர்பாதம் மலரடி பணிந்தென்றுநம் வங்கணச்

நெற்றியில் கஸ்தூரிநாட்டியே மலர்கள்சூடி
நீள்விழிக்கு மையுந்தீட்டியே

முத்திதருங் குன்றைநகர் முருகையனார் வாசல்நாளும்
பத்தியுடனனுதினமும் பாதம்நல் பூசைசெய்யும் வங்கண

புள்ளிமயில் மீதில்வருவார் வினைகள் தீர்க்க
பொருந்து வெண்ணீறு நிதமுந் தருவார்

வள்ளிமயிலாளுடனே வாகுகூறிவிளையாடும்
அள்ளிவெண்ணீறு தரும் ஆறுமுகவேலர்வாசல் வங்கண

வாசனைசேர் குன்றைநாடான் தேனூறும்
வைகைவளர் சேமநாடான்

காசினிபோர் போற்றவருங் கைலாச பாலனுடுங்
கண்ணையன் பாதநாடுஞ் சிந்தை நாடித்தாடும் வங்கண

உத்தமியாள் சத்திபாலன் தெய்வானை வள்ளி
உண்மையுடன் மயிலின் வேலவன்

சத்ருசங்கார வேலாய் சண்முகனே யெனையாளாய்
பத்திரமும் வில்வநாளும் பணிந்தே னுந்தன் பாதமாளும் வங்கண

விருத்தம்.

கங்கைக்கு மூலகமெங்குங் காத்திடுஞ்சத்திவேலா
மங்கைபங்காளரிலா மான்மருகோனே வேலா
செங்கையாலுனது பாதஞ் சேவடிதுதித்து நின்றேன்
அங்கபொன்மயிலிலேறி யடியேனைக் காத்திடீரே

சரணத்தரு.

சரணஞ் சரணமுன்பாதம் வடிவேல்முருகா
சரணஞ் சரண முன்பாதம்

அரவணிபாலனுன ஆறுமாமுகவேலா
ஆதிவடிவாய் நின்ற அருள்வள்ளி மணவாளா சரணஞ்

சூரசங்கார வடிவேலு சுப்ரமண்ய சுவாமி
துணையிருந்து ஆளு கருணைதர

வாரந்தவறு தெந்தநாளும் வடிவேலுந்தன்
பாதம் மறவேனினி மேலும் சரணஞ்

தோகைவள்ளிமாது தினைக்காவில் வேடரூபம்
தோன்றிட வனத்திலங்கே மேவு வேங்கைமர

மாகவே முளைத்தெழுந்தாய் தாவி கிழவனுரு
வாகியதோர் கோலவள்ளி யானைமணம் புணர்ந்தவா சரணஞ்

தேசமெங்கும் பவனிவருவார் எளியேன் துயர்
தீர்க்கவே வெண்ணீறு தருவார் பிரியமுடன்

வாசமாரிஷித்திரு வாயைத் திறந்துனது
வந்துவரந் தந்தருளும் வாலசுப்ர மண்யநாதா சரணஞ்

நன்மையுடன் ஞாயிறு திங்கள் செவ்வாய் முத்தங்கொடுக்க
நல்புதன் வியாழன் வெள்ளி யாவாய் சனிவிலக

வண்மையுட னுனதுகதி தாவா ஆறுமுகம்
வடிவேலு குமரேசா குடியாக வென்னையாள்வாய் சரணஞ்

வேதா விநோதா யருள்பாத விமலர் தேவர்
நாதா கிருபைதர வாதா உனதுகதி

வெள்ளியங் கிரியருள் வள்ளிதன்லோலா
வேலவா நின்னைவென்னை யாளுவாய் பாலா சரணஞ்

கரியோன் மருகன் கந்தசாமி உனைத்துதித்தோர்
காசினிவாழ்வா ரென்றும் பூமி வளருந்தம்
திருஞானசம்பந்த மூர்த்திக் காமி ரிஷிகள் தேவர்
தினந்துதித் தோர்க்கரும் வரந்தாமி நிதநிதம்

திசைமுகன் நான்முகன் தினந்தினம் பூசைசெய்.
சேவலறுமுகா மால்மருகா வேலா சரணஞ்

கலித்துறை.

மன்னரும் வேந்தர் பணிகுன்றைத் தேசிகன் மான்மருகா
என்காளுமுந்த னிணையடிபோற்றி யிருந்தவர்க்குத்
தன்னாலே செல்வமும் வாழ்வுங்கேவந்து தழைத்திட வெங்
கண்ணாலே பார்க்க மயிலேறிவந்தென்னைக் காத்திடிரே

விருத்தம்.

அற்புதமானகுன்றை அரகரமுருகாபோற்றி
மற்புதமாகவேதான் மறலிவந்தணு கிடாமல்
தப்பிதஞ் செய்தாலும் தான் தவறிடாதென்னையுங் காத்து
நற்பதமாக யெந்நாளுமே காத்திடரே

வசனம் சிங்கனானவன் வந்து சுவாமியின் பாதத்தைத் தரிசித்துப் பூசி
துக்கொண்டிருக்கும் போது குறவஞ்சிப்பெண்ணானவள் வருகிறவிதங்காண்க

விருத்தம்

நடனசங்கீதவாத்தியம் நக நக நகெவென்றும்
கடலொலி போலவோசை கவிரிசாமரையிரட்ட
வடகை லாசன்மைந்தன் வளர் கந்தன் வாசல் முன்னே
குடமுலை மாது மங்கைக் குறவஞ்சிவருகின்றாளே

வசனம் குறப்பெண்ணானவள் சுவாமிதர்சனஞ்செய்கிறவிதங்காண்க

தரு.

வஞ்சி ரஞ்சிதவஞ்சி வந்தாள் நல்ல
வானவர்மகேந்திராணியைப்போல
வஞ்சிரஞ்சிதவஞ்சி வந்தாள் வடிவேலன்வாசல் வஞ்சி

கொஞ்சிய மொழிபேசி செஞ்சிலம்பணிசந்தாட
கோதைமயிலாள் குன்றைத் தேசிகன் சந்நிதிலே வஞ்சி

பத்தினிதனக்கு முன்னழகாள் புவி
பாவையர்தனக்குள்ளப் பூவையின்னழகாள்

சித்தியாய் மதன்கலை பழகாள் வர்ண
சேலைமுன்னழகான கோலமாமயிலாள் வஞ்சி

நேசவல்லாசமான மயிலாள் இங்க
நேர்குயில் போல்மொழி பேசிய வொயிலாள்

ஆசையாய் வளரிடைத் துயிலாள் குன்றை
ஆறுமாமுகவன் தன்னடியினை பணிவாள் வஞ்சி

நாட்டமாய் வளர்கெண்டைச் சேலை காதில்
நவரத்னமழுந்திய பசும்பொன்னோலை

தேட்டமா யிளந்தண்டு வாழை யிடை
சேயிழையாள் குமரேசர் முன்னாலே வஞ்சி

தோகையுங் குறியங்கே புனைக்க இந்த
தொல்லுலகில் ராஜர் துரைமக்கள் நிலைக்க

சாகையாய்ப் பெரியோர்கள் தழைக்க கவி
தாசன் சுபரமண்யன் தமிழென்றும் நிலைக்க வஞ்சி

சுந்தர முகவ தனங்கள் மலர்
தாமரை யிதழென்னுந் தடங் கைகளிலங்க

சுந்தர புருடருங் குலுங்க வளர்
தோகையுங் குமரனைத் தொழுது முன்னிலங்க வஞ்சி

நெற்றியில் கஸ்தூரிப் பொட்டும் விழி
ரெண்டுக்கு மையிட்டுத் திலதமு மிட்டு

சுத்தியே கைவளை தொட்டு வளர்
சூரசங்காரனே துணையென்று கிட்டும் வஞ்சி

கந்தனை மனதினில் வாழ்த்தி குறி
காசினிபோர்க் கருளாகவே தேத்தி
வந்தனையாய் மலர் சாத்தி குற
வஞ்சியுங் குமரனை மனதினில் போற்றி வஞ்சி

கட்டளைக்கலிப்பா

வாசனைகைலாசபதியுட மைந்தனுவளர் கந்தசாமிதான்
சாதிவிதனிற்பாவர்மகிழ்ந்திட காவில்வில்வ மலர்தும்பைசாத்தியே
தேசிகன்குமரேசன்பதாம்புயம்கொண்டனிட்டுச்செரிசனஞ்செய்தங்கே
பூசனைசெய்தடியாளையுங்காத்திடபோற்றினேன்வினைதீர்த்திடவேணுமே

வசனம் குறவள்ளிப் பெண் சுவாமியினுடைய பாதத்தைப் பூசைசெய்கிறவிதங்காண்க

பூசைத் தரு.

வாசனை குன்றைநகர் வடிவேலு பாதம் பணிந்துகொண்டேன் நிதம்
பூசனை சந்தனைக்கு வரமருள் பூரணமால்மருகா

மாலுமயன் வாதால் அடி முடி வாகவே தேடிடவே புவி
ஞாலமும் வழங்கிடவும் அண்ணாமலை யாளுண்ணாமுலை பாலா

குழுகுமலை பழனி திருக் குன்றங் கந்தாசெந்தூர்வாழும் நிதம்
புகழுகு சவ்வாதுடையாய் எட்டிகுடி புகழாவினன் குடியான்

கந்தனை விடாதும் விளையாடி வாழுகன்னையாள்வாயே நிதம்
உந்தனை நம்பினேனுன் குன்றை நகர்க் கந்தனே மால்மருகா

தெள்ளிய சூரனுடன் எதிராடும் வள்ளிமணவாளா நீயும்
புள்ளிமயி லேறி வினைதீர பள்ளி வெண்ணீர்தருவாய்

தேனுறு விநாயகர்க்குப் பின்னோனான தென்பழனிமுருகா நிதம்
வானுமிந் தேவர்களுக்கும் குடிபேத்தும் வள்ளிமணவாளா

பட்டுக்கடங்காத கடலில் மாணிக்கக்கைபாலே உதிர்
பிட்டுக் கடிபட்டவன் சுதன்பதம் இஷ்டமெனக் கிட்டவா

தேனூறு தங்கமலை குன்றைமலை சேவலன்வாழ் மலையாம் நிதம்
மானுறும் வள்ளியுமேல் மோகமுள்ள மயூரகிரியானே

தென்குளந்தா புரியான் கவுரிவல்ல திரன்மகராஜன் நிதம்
மங்கள கல்யாணன் வடிவேலு மலரடி தான்பணிவோன்

அருமைபதாக வளர் குரு ஆறுமுக தேசிகரும் நிதம்
உரிமையாய்த் தான்பணியும் வடிவே லுன்பாதம் நான்மறவேன்

சன்முகன் வாசலுக்கு விசாரணைச் சபாபதித் தம்பிரானும் நிதம்
உண்மையாய்ப் போற்றிசெயும் மயிலேறும் உலகாளுஞ் சேவகனே

குன்றைக்குடியாளும் குமாரவேல் என்றைக்கும் யான்மறவேன் உன
தணடைக்குவந்தோர்க்கு வினைவரா தென்றைக்குங் காப்பாயே

தைப்பூசம் உத்திரமும் சூரனுட சங்கார சஷ்டியிலே என்னு
மெய்ப்புடன் கார்த்திகையும் புவியெங்கும் விளையாடும் வேல்முருகா

சரணஞ் சரணமுன்தாள் அடியிணை தாள்பணிந்தென்னாளும் நிதம்
வரமது தந்தருளும் குன்றக்குடி வள்ளிமணவாளா

வாசனைசேர் கவியன் சுப்பிரமணியன் வாழ்த்துங்குறவஞ்சிக்கு இந்தக்
காசினியோர் மகிழ வரமருள் கந்தையா செந்தூரா

விருத்தம்.

தென்னிலாவான குன்றைச் சேகிகன் பாதம் போற்றி
வள்ளிதெய்வானை பாகா வாரீர் குருபரனோனும்
புள்ளிமாமயிலிலேறி பூரணகடம்பஞ் சாத்தி
அள்ளிவெண்ணீறு தந்தான் ஐயனே போற்றி போற்றி

வசனம் இப்படிக்கிக் குறவஞ்சியானவள் சுவாமியினுடைய பாதத்திலே சகலபுஷ்பங்களையுஞ் சாத்திப் பூசைபண்ணிக் கொண்டிருக்கும்போது குழுவன் சொல்லுகிறயிதிங்காண்க

விருத்தம்.

வச்சிரமழுத்து செங்கை வனகிகென்னெறியிருளே
உச்சிதமான தெய்வலோகமுமூவரும் வாழ்த்தும்
சச்சிதமான தொன்னைக் கன்னிபுமலைமிறும்
அக்ஷையுளாப்பாவென்று அருகுயர்குழுவன்கேட்பான்

வசனம் அகோ வாராய் பெண்ணே குறவஞ்சி சுவாமியினுடையபாதத்தில் மகாபத்திமை யோடும் பூசைசெய்துகொண்டு நிற்கிறாயல்லவா உனக்குத் தெரிந்தமலைகளும் அந்தமலைநாடுகளும் அவைகளின் வளங்களும் சொல்வாய்

கலித்துறை.

கேளுங் குழுவாமலை குணைகாட்டு கேட்கவந்தாய்
நாளுந்துனை முருகையனைப் போற்றியே நாளுங்குன்றை
யாளுங்கைலைக் கிரிமுதலோகமட்டைளுகும்
வாழுங்குறி சொல்கிறவஞ்சி யென்றென்னை வாழ்த்து வரே

வசனம் அகோ கேளும்பிள்ளாய் குழுவா எனக்குத் தெரிந்தமட்டும் மலைவளமைகள் சொல்லிவருகிறேன் கேளும் பிள்ளாய்

மலைவளமைத் தரு.

தன்னதன, தனனதன, தனனதன, தனன.

ஒன்னுமலை விண்ணுமலைத் தோணுமலை யுண்டு அதில்
தோகையர்கள் விளையாடும் யோகமலைகண்டேன்

என்னுமலை பழனிமலை யேகிமலை சென்றேன்
யெம்பெருமான் சோலைமலை யன்பாதிலுண்டே

முன்னுமலை முகுந்தன்மலை மூர்க்கன்மலைசென்றேன்
முதன்மையுடன் கழுகுமலை குன்றைமலை கண்டேன்

அன்னுமலை பொன்னுமலை அழகுவெள்ளிமலையும்
அருமையுடன் தங்கமலை முருகமலை கண்டேன்

என்னுமலை விராலிமலை யேகியதிலுண்டே
ஏறுமலை கூறுமலை காருமலை யன்றே

கற்பகமுந் தான் தருகும் அற்புதவேள் மலைகள்
கதிர்காமஞ் செந்தூரும் பொதியமலை தானே

தோணுதங்கே மயிலாடித் தோகைவிரித்தாடும்
தொங்குகனி மந்திபலா அங்குமதில் தாவும்

வானரங்கள் விளையாடிக் காளகங்கள் தாவும்
வண்டினங்களிசைபாடக் கண்டன்னங்களாடும்

கானமந்தான் கிளி குயில்கள் தானும்வந்தே கூவும்
காதலருள் மலையருவி தேனுறும் ஊறும்

செந்நெல்லெங்கும் விளைவாகும் கன்னல் கமுகோங்கும்
செண்பகமும் புன்னைமல்லி அன்பாயதில் காணுகும்

கொக்குகளுஞ் சினையதிலே குயில்கிளிகள் கோதும்
கோர்வையுடன் வண்டினங்கள் பார்வையதிலாடும்

மேகமது பூம்பிமழை யேகமதுவாக
மேருடனே கழுகுமிட ரோடிவயல் தாவ

வாளைகளும் தெளி வரால் மகரைகளுமேவ
மடலெட்டித்து முகில்கிழித்து வானுலகுக் கேக

துளிவழியே யிறங்கியதில் சுனையதிலே வாழ்கத்
தோணுதிதோ தேனுறு தானதுவு மாக

உழவர் வயல் தெளிநடவு பலவரவ குழுவர்
ஓங்குதென்னை மீதினில்வா னரங்கள் வந்து தாவ

வயல்தருவோர் சங்கினங்கள் வலித்தவர்களேவ
வானரங்கள் பதிவிளநீர் தானவர் மேலேவ

அந்நமையுடன் முனிவர்சிவ யோகிகளுந்தானும்
அந்தணர்கள் பெரியோர்கள் தவமுனிவர் தோணும்

மலைகளெல்லா மடங்களன்ன தானமதுவாக
மயில்சேவல் குயில்களெல்லாம் மலைகளெங்குங்கூவ

வேலவரும் மலையில் சத்தி வேலவருமாக
வெள்ளிமலை பொன்மலையுந் தங்கமலையாக

கோலமயில் வேலவருங் குமரனு முன்னாக
கொங்கிளமா யிடும்பனுடன் கடம்பனு முன்னாக

வாரமுள்ள வடிவேலர் பாதமது போற்றும்
வஞ்சிகுற வஞ்சியென்றே வானுலகோர் வாழ்த்தும்

வசனம் அகோ கேளும் பெண்ணே குறவஞ்சி இப்படி வளம் பொருந்திய குருநாடாகியது எந்த நாடு அந்த நாட்டின் வளமையைச்சொல்லிவா குறவஞ்சி

தேசமெங்கு மேக மெல்லாம் செழித்துவரும்நாடு
தென்கையில் வளருகுன்றக் குடிசேம நாடு
வாகுபெறும் வல்லவர்கள் வாழுமந்த நாடு
வன்மையுடனே சோமகிரி அன்னசத்ர நாடு
கோகிலம்போல் குமரேசர் குடியிருக்கும் நாடு
குணமுடனே வளருகுன்றக் குடி க்ஷேமநாடு

வசனம் அகோ கேளும் பெண்ணே மலைவளமை நாடுவளமைசொல்லிவந்தாயல்லவா. இனி ஆண்டவனுடைய வாசல் வளந் சொல்லிவாரும் பெண்ணே குறவஞ்சி

முத்தமிழ்ச்சே ரனுதினமும் சந்நிதியுள்ளவாசல்
மும்மதவேழ் நேருற்ற விநாயகனார் வாசல்
பந்தர்களுக் கனுகூலன் கர்த்தனுட வாசல்
பழனிமலை குமரகுரு பழிக்கஞ்சி வாசல்
வித்தைதரும் வினைதீர்க்கும் வேலவனார் வாசல்
விண்ணவர்கள் முனிவரென்றும் விளங்குமந்தவாசல்
அத்தனுட கிருபையினால் அருள் குமரர் வாசல்
அன்னதான மடமுறவும் அழகு திருவாசல்
சித்தமுடன் தெய்வானை வள்ளியம்மை வாசல்
சின்மைய ஆறுமுக தேசிகனார் வாசல்
வாசலது நாடுவளம் மலைவளமே சொன்னேன்
வடிவேலர் வாசல்வளம் வஞ்சியுமே நானே

விருத்தம்.

கன்னல்சேர்கமுகு தென்னை கதலிகள் பலாவுமெங்கும்
தென்னையில்லாமல் காணும் தேசங்களெங்கும்வாழும்
அன்னமால் சேர் தெய்வானைவள்ளி அருள் குமரேசர் நாட்டில்
இன்ன நானெனக்குத் தோன்று மியல் குறிசொல்லுவேனே

கலித்துறை.

கடவாரணத்தான் தொகையடி விநாயகன் காட்டன்செட்டி
மடவாள் கடவுள் மலரடி சித்தம் மகிழ்ந்து நன்றும்
இடமாயிருந்து வடிவேலர் பாத மிருத்திமனத்
திடமாய்க்குறி சொலத்தின்நாவில் முன்னின்று செப்புவியே

வெண்பா.

வாசம் புகழ் முருகா வாக்கருள நாவிலென்றும்
பூசனமாயுன் பதத்தைப் போற்றினேன் — ஆசினியில்
கண்டேன் மனமகிழ்ந்தேன் காட்சிதாருன்னெனக்கு
என்றைக்கு மாறு திரு

வசனம் அகோ கேளும் பிள்ளாய் ஆனால் என்னுடைய பாட்டியாள் காலையில்நடந்துவந்தகுறியொன்றுசொல்லுகிறேன் கேளும்பிள்ளாய் குறவா

நொண்டித்தரு

சிவனார் பதமறவேன் குன்றைத் தேசிகன்பாதத்தை நான்மறவேன்
தவமேதருகுமரா தொந்தி தந்திமுகனுக் கிளையோனே
வாசம்புகழ்வீர தேவி மாகாளியம்மன் கிருபையினால்
தேசஞ்செழித்திருக்க ராசர் செங்கோல்முடிகள் தழைத்திருக்க
அருமையுடன்மகிழும் குரு ஆறுமுகதேசிகர் பாதத்து
திருநாமந்தான் துதித்து குன்றைத் தேசிகன்பாதமனதில் வைத்து
வளர்சேர்கவியபின்னு சுப்ர மணியன்குறவஞ்சி வாழ்த்து தமிழ்
பிழைகள்மனம்பொறுப்பரவர் பொற்பாதம்போற்றியேனப்பவுமே
பணிந்தேன் தமிழ்கூற தமிழ்ப் பாவலர்நித்தமனம்பொறுப்பீர்.
பூருவமுன்னாளில் சிவன் பொற்பாதம்போற்றியே யெப்பவுமே
கூறுங்குறவஞ்சியாள் பாட்டி கோரியவன் குறி தானுரைத்த
அந்தக, கதையுமெனக்குரைத்தாள்குறிக்காரர்களெந்நாளுபாருலகில்
ஆதிசிவன்கபில ஈசன் அய்யன்பாதாம்புய மெய்யனுமே
ஓதியவனுரைத்த குறி யொன்றுங்குறையாது இன்றுலகில்
பார்வதியாளிடமுஞ் சென்று பைங்கொடியாள்கையை யங்கவளும்
நேராகத்தான்பார்த்து மன நேர்த்தியதாகவே சாஸ்திரத்தில்
அம்மா, ஆனைமுகந்தோனும் பிள்ளையாகவேபின்னுமவற்கிளையோன்
சரவணைதன்னில்வந்து சிவன் தன்னருள்கார்த்திகைப்பெண்களினால்
ஆறுகுழந்தைகளும் ஒன் றாகவேபோகுது நீவளர்க்க
நேராகத்தோனுதங்கே பின்னும் நின்றிடும்பிள்ளைக ளுண்டுனக்கு
தோணுதெனக்குறியில் அந்தத் தோகைமயில்வளர் வாகனரை
ஆறுமுகமெனவே பேரு அன்பாகநீவளர்த் தென்புட்னே
கூறினேனென்குறிப்பும் அந்தக் கோதையெனுங்குற வஞ்சியவள்
நேராயுரைத்துவிட்டு வளர் லெட்சுமிதன்னிடம் சென்றவளும்
வந்தேமுகம்பார்த்து அந்த மாதுமனது குறிப்பறிந்து
எந்தாயேலெட்சுமியே உனக் கிப்போதொருபிள்ளை பெண்குழந்தை
பிறக்குமெனவுரைத்தாள் அந்தப் பொற்கொடிக்குக்குறிசொல்லிவிட்டு
அப்பால்நடந்தவளும் பிர மாவுடலோகமும் வந்துசென்று
வாணிசரஸ்வதியே கலை மாமகளே மனமேமகிழ
சாஸ்திரவித்தைகளை தமிழ் தன்னையே யோதிய கன்னியரே

ஓதுதமிழ்தனையும்என்று உத்தமிக்கேபுத்திசொல்லிவிட்டு
ஈரேழுலோகமெங்கும்புவிக் கெங்குங்குறிசொல்லுமங்கையவள்
தாராளமாகவேதான குறி தானுரைத்தாள் பாட்டிகானறிய
ஆசையுடன்மகிழ்ந்து குறி யப்பாலேநான் செப்புவேன்கேள்
நளனெனசக்கரவர்த்தி மகாராசன்மனையாள்தமயந்தி
மனையாள்தனதிடத்தில் குறி வாக்கினுல்சொன்னவசனமது
நளனை நீ மாலையிடு அன்னம் நாடியுனதிடமதாக
வருதுமயங்காதே நீயும் மைந்தர்கள்பெற்றங்கே வாழ்வாயென்றேன்
திடமாய்க் குறியுரைத்து மன திட்டவேமனதிட்டமுடன்
மடவாள் நடனமிகும் திரு மாநகரயோத்தி நாட்டரசன்
அரிச்சந்த்ராஜனுமே வெகு அன்புடன்தேவியாளு சந்த்ரமதி
இருபேரிடமும்வந்து குறி யெல்லாரும் பார்த்தங்கேசொல்லுகையில்
வாராய்நீராஜேந்த்ரா ஒரு வார்த்தைகுறவஞ்சி வாழ்த்துகிறேன்
இனிமேலொருகாலம முனி ஈசுரனாலே வருதுயரம்
தனியேவருகுதங்கே சீமை தன்னையும்விட்டுப் புறம்போக
துயரமிகப்படவும் வருந் துன்பங்கள் நீக்கிச் சுகம்பெறவும்
இருக்குதெனக்குறியில் இதுக் கெப்படியாயெந்தன் சொற்படிகேள்
பொய்களுரையாதே என்று போற்றியவர்க்குறி சாற்றிவிட்டேன்
கோசலநாடதனை ஆளுங் கொற்றவன்ராசன் குபேரனைப்போல்
ராசன்தசரதனும் அவர் நாடதருபதி னாயிரமாம்
வாசமுடனாண்டார் அந்த வானுலகெங்கும் மனமகிழ
கன்னியர்மூவர்களு அவர் காதலியாளுடன் வாழ்க்கையிலே
மைந்தர்கிடையாது அந்த மங்கையைப்போல ராஜன்பெண்களுக்கும்
கொங்கைமனமகிழ அந்தக் கோதையிடமங்கே நான்போனேன்
குறியேமிகப்பார்த்து வளர் கோசலைதேசத்து ராசேந்த்ரா
பிரியமுடன்கேளும் இப்போ புத்திரசந்தானமுண்டாகும்
ரிஷியாசெலுநாமம் காட்டில் கோரகக் கலைக்கோட்டுமாமுனிவன்
வனமேயவர்தவசு செய்யு மாமுனிரோமபத நாட்டில்
இருக்கும் ரிஷியானை கூட்டி இக்ஷணம்வந்துமுன் அக்ஷணத்தில்
யாகம்நிறைவேற்றும் புத்ரர் நால்வர் பிறப்பார்கள் நானிலத்தில்
தாகந்தெளியுமென்றேன் சொன்ன சாக்கிரதைப்படி சீக்கிரமாய்
பிறந்தார்கள் நால்வரதில் பின்பு பூருவநாளது சென்றபின்பு
அத்திபுரத்தரசர் செங்கோன் ஆண்டிடுஞ் சந்தன மகாராசன்
வம்மிசம் பேர்விளங்கும் குந்தி மாதேவியாளு மகிழ்ந்திடவே
கன்னிவயதினிலே குறி காதலிக்கேபார்த்து நானுரைத்தேன்
சீரானகுந்தியம்மாள் ஒரு சேதிநான்சொல்லுறேன் பாருலகில்
வீரானமாமுனிவர் வளர் மின்னரசேயுந்தன் கண்ணெதிரே
வருவாரவரிடமாய் அஞ்சு மந்திரமும்பெற்றுத் தந்திரமாய்
இருப்பாயதினாலே உனக் கெல்லாபலனுங் கிடைக்குமம்மா
பிறப்பார்களய்வரதில் முன்னும் புத்திரனுங் கன்னி பெற்றெடுப்பாய்"

வளர்ப்பாரோரிடத்தில் அந்த மந்திரபஞ்சமறவாதே
என்றுகுறியுரைத்து புவி யெங்குமகிழ்குன்றைத் தேசிகனுர்
கந்தன்வரப்பெறவும் கலி காலங்களெங்குங் குறியுரைத்து
வந்தேன்மனமகிழ்ந்தேன் வடி வேலவர்பாதம் மறந்திலனே

விருத்தம்.

வெற்றிமயில்வாகனனைப்பரனைகுன்றை
வேலவனையனுதினமும்வண்டியபங்கும்
பத்தியுடன் குறியுரைத்தேன் புவியோர்க்கென்றும்
பராபரனை பழிக்குஞ்சம்பரனேயென்று
சத்தியமுந்தவறுதென் குறவர்சாதி
சாஸ்த்திரமும் பொய்யாது சண்முகர்க்குமுன்னே
முத்திதருங் குமரகுருபரனேயென்று
மூர்க்கமுடன் குறியுரைப்பேன் யார்க்குந்தானே

விருத்தம்.

கொம்பரசத்தேன்குடிப்போம் கனிகள் தின்போம்
கோலமயில் வாகனரைச் சரணஞ்செய்வோம்
அன்பர்களுக் கன்பர்களாய் வாழ்வோம் செங்கோல்
அரசர்கட்குக்குறியுரைப்போம்அருமையாக
சம்புதெய்வக்குறக்குலத்தில் வளருஞ்சாதி
காவிலத்தில் பொய்களணுவுரையோம்சொல்லு
செம்புதருங் குறச்சாதியெங்கள்சாதி
தெய்வகுறக்குலமெனவேசெப்புவேனே

வசனம் அகோகேளும்பிள்ளாய்குழுவா நாங்கள் தெய்வகுறகுலமெங்கள் சாதிவளமை சொல்லிவருகிறேன்கேளும்

தரு.

சாதியெங்கள் சாதிவளம் சாற்றுகிறேனுனே
ஓதியதோர் குன்றைநக ராதிபதி வாசல்
ஓவியம்போல் குறிகளென்றுங் காவியுரைத்திடுவேன்
ஓங்குங்கன மோங்குங்குறி பாங்கும்புவி காணும் குறச்சாதி
வெள்ளிமலை வாழ்குறவர் வள்ளிகுக னுரை
வேரே பணிந்தோரே புவியோரே வினையாரே
வெற்றியே மனதத்தியே குறிபத்தியே புவி சுத்தியே வரு சாதி
குறவர்குலநாங்கள் பொய்யைக் கூறுவது மில்லை
குறிசனுரையாமல் பொல்லாக் குறவர்களுமில்லை
அறிக்கு யாந்தை பொறக்கி தலைமுறைக்கு இன்றுள்வரைக்குந்தின்னுச்

கோப்புரசத் தேன்குடிப்போம் கொக்தளமா யிருப்போம்
கோமா னாறுமுகவன் குறவஞ்சி நிதம்படிப்போம்
கோதையே குமமாதையே தமிழ்மாதையே ஒருபாதையாய்வரு சாதி

வேலர்குற மாதுதன்னை வேண்டியணைக் தநிகழ்
வெற்றிவடிவேற்குறவர் வித்தனெங்கள் சாதி
வேண்டியே மலையாண்டியே பரிதாண்டியே குறிமீண்டியேவரு சாதி

வண்டிமிங்க வெசியிலென்றும் மலர்கள்கொண்டைச்
சூட்டிடோம், வானறிய மானகனி மணிகளணி பூட்டோம்
கண்டுமே கனமுண்டுமே சுகமுண்டுமே புவியென்றுமேவரு சாதி

விருத்தம்.

பத்துமா முடி யோன்றன்னைப் பகரொருமுடியோனக்கு
சொத்துமா வரக்கர்தம்மைக் குலையறவதைத்தராமன்
முத்துடன் மருகன்குன்றை முருகையன் வாசல்காலும்
சித்துடன் குறிகள் சொல்லுஞ் சிங்கியென் பேராமே

குழுவனுக்கும் சிங்கிக்கும் தர்க்கம்

கோச்சகத் தரு.

சிங்கி

நாதனருளாலே முன்னும் நானிலத்தோர் தாமகிழ
ஆதனமதான குன்றை அன்னதானவாசல்முன்னே
காதலுடன்வாழ்குறவர் கந்தர்வள்ளிசொந்தடிமை
வாதமுறை செய்தொழிலாள் வஞ்சிகுறவஞ்சியுநான்

குழுவன்

சொன்னமொழிபிசகா தோகை யிளமயிலே
கன்னல்மொழிமாதேநீ கண்டகுறிசொல்லுவதே
நன்னகரலோகமெங்கும் நாதனருளாலனது
(அடி) மின்னரசேபெண்ணமிர்தே மிகமகிழ நீமனதுதானே

குழுவன்

மிகமகிழநீமனதுதானே குன்றை
வேலவனைப் போற்றிசெய்தால் வேண்டுவதுமானே
அகமகிழத்தானும்வரம் கொடுப்பார் சுவாமிகுன்றை
ஆறுமுகன்பாதநிதம் அயராமலிருப்பாய்

சிங்கி

இருப்பாயெனச்சொன்ன வியல்குழுவா யிக்காட்டில்
பொருப்பாயவர்பதத்தைப் பூரணமாய்த்தான்பணிந்தால்
மருப்படாதென்னாளும் மலையான்பதமறவைநிதம்
குறிப்பாகத்தாணினைப்பாய்நாளுங்குழுவனேநீகேழ்க்கும்வரந்தருவார்

குழுவன்

குழுவனெங்கே கேட்குவாரத் தருவார் குன்றை
குமரேசனை பணிந்தால் குறித்து முன்னே வருவார்
வழுவாது சொல்தவறுதென்னும் குறி
வந்தபடி சொல்லெனக்கு கருத்திருந்தேன் மூன்றும்

குழுவன்

மூன்றுமெனுமாதே மொழிந்தபடி சொல்லுகிறாய்
என்று நினைந்தகுறி யெனக் கேட்க நீயருள
அணைனும் புவியிலரசர்களும் யாவர்களும்
முன்னும் புவியகலில் நாளும் மால்மருகன் வாசலதில் மூன்றும்

சிங்கி

மால் மருகன் வாசலதில் மூன்றும் கருணை வளருமன்ன
தானமடம் வாழுங்கந்த ரென்னும்
தென்றுவி நதி நாடாளும் குமர
தேசிகனைப் பணிந்து குறி செப்புவது மாகும்

சிங்கி

ஆகுமென்னுங்குழுவா அஞ்சாதொரு நாளும்
பாருவமாய் வேலர் பதம் பணிந்தால் பதம் பெறலாம்
ஏகுமென்னும் வேட்டைக் கெப்போது நின்குறியால்
வாகுவெனும் வீரமுள்ள வீர வாகு தானை யாகுதிப்போ

குழுவன்

(வீர)வாகுதானையாகுதிப்போ நாளும் தேவி
வளரும் வீரமாகாளியை மனதினிலே யாளும்
ஏகுவது வேட்டையது போலே குறிகள்
எல்லாமுந் தோனு தெனக்கிக்கணமுன்னாலே

குழுவன்

முன்னே குறியுரைத்தாய் மூர்க்கமுள்ள பெண்ணரசே
கண்ணே மனமகிழ (நான்)கந்தனுட சொந்தடிமை
சொன்ன மொழிப்படியாய் என்னை சொற்கிளியே நற்குயிலே
பெண்ணேயுனது சொல்லுப் பேதமாய் நினையாதே

குழுவன்

பேதகமாய் நினையாதே மாதே கந்தன்
பெருமிதத்தைச் சொல்லவேணும் புவியினிலிப் போதே
(நமக்)காதரவு வேல் முருகல்லால் வேறே
அந்தரங்கம் யார்நினைப்பேன் உந்தனுட சொல்லால்

சிங்கி

சொல்லவெனதுமனம் சொந்தமென்றேயெந்தனிடம்
சல்லாபமான கந்த சாமியுட வாசலிலே
வல்லாயுதமுடையாய் வளர்குறியை வாழ்த்துதற்கு
நல்லாதரவு தரா தனுட தன்செயலால்

சிந்து

நாதனுடை தருஞ்செயலால் சொன்னேன் இந்த
நானிலத்திற் குறியுரைப்பேன் தோகைமயில்முன்னே
நீதமுண்டு குறையா தவர்க்கு குமர
ரேசரையும் அந்திபகல் நெஞ்சில் நினைந்தோருக்கு.

விருத்தம்.

திடத்துடன் குறவனங்கு தினமகிழுன்னதான
மடத்தினில் முன்னேவந்த மைவிழி மாதேசேளாய்
குடத்தினில் தீபம் போல குறித்து நின் குறியவார்க்கால்
நடத்திடவேணுஞ் சேவல் நாயகன் வாசல்முன்னே

அகோ கேளும் பெண்ணே குறவஞ்சி நீ சொல்லிய வசனமெல்லாங்குடத்திலிட்ட தீபம்போல் பிரகாசமில்லாமலிருக்கிறது நாலினைத்தகுறி சொல்லிவரவேணும் பெண்ணே குறவஞ்சி

கலித்துறை.

தேசமெங்கும் புகழ்குமரேசர் தெண்டாயுதனை
வாசமதாக நினைத்தோர்க்குச் செல்வமுவந்திருந்தே
தைப்பூசமும் உத்திரமும் கார்த்திகை வாரப்புதமைகளில்
நேசமதாய்க் குறி சொல்வேன் மாதேநெஞ்சில் வைத்தே

வசனம் வாரும்பிள்ளாய் குழுவா நீ நினைத்தகுறி சொல்லுகிறேன்

தரு.

கூறுவன் நானே குறிகேட்க
வாருமுன் தானே
கூறுவேன் நானிதஞ் சூரசங்காரனும்
குன்றையம்பதிதனில்குமரேசர் முன்னே கூறுவே

தெய்வசிகாமணி சேமநாடாகிய
செயங்கொண்ட சோழீசர் தேவனை வாழ்த்தியே
சைவசமயமாஞ் சவுந்தரநாயகி
சத்தியவாசகித் தாயைநான் வாழ்த்தியே கூறுவே

தொந்திக்கணபதி தோகைவிநாயகர்
தோத்திரஞ்செய்திட சாஸ்திரமுன்னிட
தந்திமுகவனு மார்க்கமேதுவீசர்
தாள்பாதம் போற்றியே சண்முகர் வாசலில் கூறுவே

சுந்தரன்பாதம் மனதினில் நாடியே
சுத்தாய்ச்சிவன் கர்த்தன் முன்னோடியே
அந்தரநாச்சியாரோடுபேர் சகோதரி
அம்மணிபாதத்தை நன்மையாய்ப்போற்றியே கூறுவே

பாசமூன்றுமழை வருஷிக்க லோகமும்
மண்டலத்தோர்கள் மகிழ்ந்திடபாகமும்
பூசனைசெய்திடுங் கந்தையன் பாதத்தைப்
போற்றியனுதினம் வாழ்த்தித் துதித்தங்கே கூறுவே

ஏரிகுளஞ்செங்கெ லெங்கும் விளைவாகும்
ஏகசிங்காசன மாகவே வாழ்ந்திடும்
பாரினில் வேட்டை பலித்துமுன் கூடிடும்
பன்னிருகைவேலர் பாதம்பணிந்திடும் கூறுவே

ராசன்கவுரிமகா ராசன்செங்கோலும்
நாடுநகரங்களெங்குமே வாழ்ந்திடும்
வாசனையாய்க் குறவஞ்சிபடித்தோர்கள்
வம்மிசநீடூழி வாழ்கவே யென்நாளும் கூறுவே

குன்றைக்குடியான் குமரேசன் பாதத்தைக்
கொண்டாடினோர்க்கெல்லாந் தண்டாயுதமுண்டு
அண்டர்புகழ்வள்ளி தெய்வானை பாகனை
அநதிபகலு மனுதினம் போற்றியே கூறுவே

வாலகவிசுப்ர மண்யன்தமிழ்க்குமூன்
வடிவேல ரெந்நாளும் வாக்கிலே நின்றிட
சோலையுள் சூழ்குன்றை மேவும்பரங்கிரி
சுந்தரமுருகனும் கந்தனைவாழ்த்தியே கூறுவே

விருத்தம்

சித்திதருங்குமரகுருபரனே ஞானச்
சின்மயானந்தவடிசிர்தானென்றும்
பத்தியுடன்பணிந்தவர்க்குப்பாக்கியமாகும்
பாருலகில்தவமுனிவர்பணிந்தென்றுநம்
முத்திதருமுருகருட பாதம் போற்றி
முதன்மையுடன்குறியுரைத்தேன் தலைமையாக
அத்திமுகனருளால் நின் கேழ்வி யெல்லாம்
அனுகூலமாகுமென்று அருளினளே

வசனம் அசோ கேளும் குழுவா நீ ஒரு வேட்டைக்காரியமாய்க் கேட்டதால் நம்முடைய குருவாகிய சுப்ரமணிய சுவாமியையும் மற்றபரிவார தேவதைகளையும் பணிந்து கொண்டுசுகமே வேட்டையாடிவாரும் குழுவா

விருத்தம்.

வட்டமதி முகமிலங்கப்பணிகள் பூண்டு
வயிரமணி தகதகெனவடிவேல் வாசல்
திட்டமுடன் குறிகேட்கமகிழ்ந்து மெத்த
தினமகிழுஞ் சிங்கனே நீ கனமதாக

இஷ்டமுடன் வேட்டையினிச் செய்யவேணும்
ஈராறு கையுடையோ னருளால் நாளும்
மட்டடங் காவளர் வேட்டைக் கறுப்பர் தன்னை
மனமகிழ்ந்து பூசைசெய்து வணங்குவாயே

வசனம் அகோ கேளும் பிள்ளாய்சிங்கா நம்முடையகுறவஞ்சிப்பெண் சொல்ப்படிக்கி நமது இஷ்டகுலதேவதைகளை யெல்லாம்பூசித்துச் சொஸ்த சுகமே வேட்டையாடிவருவோம் பிள்ளாய்

தரு.

வங்கணச்சிங்கனே வாழ்த்தியே வடி
வேலவர்பாதத்தைப் போற்றியே எங்கள்

குலதெய்வத்தாசையும் வேட்டைக்
கேகவே நீசெய்யும் பூசையும்

கலியுகமூர்த்தியைப் போற்றடா நாணிக்
கருப்பணசுவாமியை வாழ்த்தடா

தெளிவுடன் நீகண மெய்க்கவே குன்றைத்
தேசிகன் முன்வந்து நிற்கவே

தேனுறு விநாயகரென்னுநான் கூட
தீபமும்பார்த்திடு கண்டுதான்

பஞ்சவர்சகாய தூதனும் ஐயன்
பாரினில்வாழ்ந்திடு நீதனும்

அஞ்சாப்பெருமாள்தன்பாதமும் நிதம்
அந்திபகல்பண்ணித் தோத்ரவும்

ஆதராண்டி யையன் பொன்னழகியும் அனை
யாகவருமன லிங்கியும்

நீதமாய்வீரமாகாளியை நிதம்
நித்தமும் போற்று முன்னாதாவினை

இடும்பனென்றேசொல்லு நீதியே முன்னு
மெப்போது நாவினில் ஓதியே

கடம்பன் முருகனுந் தேவரும் நிதம்
காக்கவருவாரே மூவரும்

வீரவாகுவெனும் பாதத்தை நிதம்
வேண்டிக்கொள் முன்வந்த யோகத்தை

காரும் அவர்செயல் மெய்யடா கன
மாளபழந் தேங்காய் வையடா

மாரியெனு முத்து மாரியை நிதம்
வைத்திலிவாய் மனங் கூறியே

பாரினில் தெய்வத்தைப் போற்றியே குன்றைப்
பன்னிருகைவேலே வாழ்த்தியே

மகேஸ்வர பூசையுஞ் செய்யட மயில்
வேலரே முன்னிற்பார் மெய்யடா

தயாராய்ச் செய்னது வெற்றி குன்றைச்
சண்முகன் பாதத்தை நத்தியே

எரிகுளஞ் சுத்திப் பார்க்கவும் பக்ஷி
யேகமாய் வந்ததைக் கார்க்கவும்

கூறியே பக்ஷிபு மெய்யதாய்க் குறும
ரேசனென்றே வேட்டை செய்குவாய்

விருத்தம்.

சட்டமாய் வேலர்பாதம் சரணமென்றடியிற் போற்றித்
திட்டமாய் குறவனங்குத் தினஞ்சயஞ் சிங்காவேட்டை
முட்டவே யெதியெங்குமூர்க்கமாய்ப்பக்ஷிபார்த்து
இட்டமாய்ப் பக்ஷிவர விதமெனக் குரை செய்வாயே

விருத்தம்.

பாரெனக் குறவன் கேட்கப் பாங்குடன் சிங்கன்றுக்
கூறெனமகிழ்ந்து எரிக் குளங்களும் வாவிசோலை
சேரென நடந்து பக்ஷி சேர்த்தியாய் வருதல்கண்டு
சாரெனுங் குறவன் முன்னே கண்டு வந்துரைசொல்வானே

வசனம் குறவன் முன்னே சிங்கன் பக்ஷிவருமுறைதைகாட்டிடுவிதம்

தரு.

கண்டேனுன்பாராய் பறவை வரக் கண்டேனுன் பாராய்

கண்டேனுன்பாராய்ஸ்ரீ குன்றையம்பதிவேலர்
கர்த்தன்குமரேசன் சித்தனக் காட்டிலில் கண்டே

அன்னமயிலது பின்னே விளையாடி
அன்றிலுந் தாராவுங் கண்டு மகிழ்ந்தாடி
நன்னயமாகிய குன்றுக்குடிமலை
நாதனரசலை நதிவையா புரிதனில் கண்டே

நாரையுஞ் செங்காலி நாரையுமுன்னிட
நாதனருள் குன்றைத் தேசிகனூட்டினில்
கோரையுங் குன்றையூர்க் கண்மாயு மேரிகள்
நேர்த்தியாய் வடக்குவை யாபுரிதன்னிலே கண்டே

விருதுகள் கூறியே மயிலங்கே கூவுது
வீறுடன் தாராவு நேருடனுகுது
மருதாபுரிமுதல் குன்றக்குடி சூழ்ந்த
மலைதீர்த்தமும் முதல் சரவணப்பொய்கையும் கண்டே

சையோகமாய்ப் பட்சி தாராவும் காரையும்
சாலையுஞ் சோலையுந் தங்கியே கூட்டமாய்
ஒப்பக்கொண்டான் கண்மாய் ஊருணி புள்வாயும்
ஓவியம்போற் பட்சி தாவிக்கூவிவர கண்டே

குருகுணிக் தாராவுங் கூழைக்கடா நாரை
கூறியேசெங்கால் நாரை பெருநாரை
சிறுவயல் கண்மாயும் ஊருணி புள்வாயும்
சிந்தாமல்க் கூடியே சந்தோஷமாய் வரக் கண்டே

ஆதிகுரு லோக மடங்களும் வாழ்கின்ற
அன்னமயிலும் அனுங்கனுங் காகவே
சாலிக்கண்மாய் முதல் ஊருணி கூடியே
சன்னதி நாடிடச் செந்நெல் விளைந்திடக் கண்டே

பார்த்தவிட மெல்லாம் பக்ஷிகள் கூட்டமும்
பச்சைப்புறுக்கிளி பாங்குடன் மயிலது
ஆத்தங்குடிக் கண்மாய் ஊருணி யேந்தல்கள்
அரகரா வென்றங்கே யனுதினம் விளையாடக் கண்டே

மடுவுகள் தோறும் வனங்கள் வனந்திரம்
மயில் குயில் வான்கோழி வாழ்ந்திடும் பக்ஷிகள்
நடுவுக்கோட்டைக் கண்மாய் தெற்கூர் முதற்குடி
நாடித்தேடித் துதித் தாடிவிளையாடக் கண்டே

பார்த்தவிட்டமெல்லாம் பக்ஷிகள் கூட்டமும்
பாங்குடன் கவுதாரி காடைமுன் னோட்டமும்
சாத்தனேந்தல் பட்ட மங்கலம் உள்க்கடை
தானையுமாய் இடயனேந்தலில் கூடியே கண்டே

தவறிடாதென்னளும் பட்சிகள் கூடியே
தானையமாய்க் குமரேசனைப் போற்றியே
சிவரி யேந்தலும் சிங்கமங்கலப் பட்டி
சேர்ந்தகிராமங்கள் கண்மாயிற் கூட்டமாய் கண்டே

அக்கரையாய்ப் பட்சி யாட்டமாய்த் தோணுது
அன்றிலுந் தாராவும் கண்டங்கேகூவுது
சொக்கனேந்தலும் கெட்டேந்தல் கால்பங்கும்
சோலைகளும் வழிச் சாலையிற் கூட்டமாய் கண்டே

தர்மசஞ் செய்யாமல் மயில்வந்து கூவுது
தாராளமாய் பட்சி ஏராளமாகுது
தேதவய லறைமா பலவூ நகர்
நித்தமரைமா நிலமங்கை காத்திட — கண்டே

வாசனைசேர் குன்றை வடிவேலைப் போற்றிட
வளருஞ் சிக்காலம் வளர் கட்டளைக்காக
பூசனைசெய் புதுக்கோட்டை ராமச்சந்திரன்
புண்ணிய னம்மனைப் பட்டி வஞ்சினிப்பட்டி — கண்டே

கீர்த்தியதாய்ப் பட்சி வாழ்த்தியனுதினம்
க்ஷேமதாய்க்குரு ரேசனைவாழ்த்தியே
நாற்றிசை போற்றிய குன்றுக்குடிமலை
நாதன் வளர்கின்ற நாடது தன்னிலே — கண்டே

விருத்தம்.

துய்யதிருமான் மருகன் குகனூர் பாதம்
தொழுது நமஸ்க்காரமதாய்த் துதித்து நின்று
கைதனிலே அம்பும் வில்லும் கண்ணி கூசா
காடை பிடிதட்டும் கவுதாரித்தட்டும்
மெய்தனிலே வெண்ணீறுஞ் சாத்திக்கொண்டை
மிகவிருது முண்டாசு பாகுகட்டி
ஐயனெனுங் குமரேசர்பாதம் போற்றி
ஆடினான் வேட்டை மகிழ்ந்தாடினானே

வசனம் குழுவனுஞ் சிங்கனுமாக சுப்பிரமணிய சுவாமியினுடைய காட்டில் வேட்டையாடுகிற விதங்காண்க

தரு.

வேட்டைகளாடினானே குன்றை வேலனைத்தானினைந்து
வேட்டைகளாடினானே
வேட்டைகளாடினான் வில்லம்புகையுடன்
தாட்டிகமாய்க்குன்றைச் சண்முகர்காட்டினில் — வேட்டை

நாரையிருக்குஞ் சொன்னேன் சாம்பா
நாரைபறக்கு முன்னே
ஆரையுமென்னுதான் குன்றுக்குடி குமரையன் பதாம்புயம் மெய்யென நாடியே — வேட்டை

கண்ணிதிருத்துவாயே காணுங்
கோழிபெருத்ததையா
உன்னியபட்சிமுன் சன்னிதிகிட்டவு
ஓடியேசிங்கனு நாலாதிரட்டவும் — வேட்டை

வக்காயெதிரிடுது தாரா
வந்துமறிபடுது
அக்கரையாகவே கொக்கது தாவுது
ஐயன்குமரேசன் வெய்யனன் னாட்டினில் வேட்டை

தோகைமயில் வளர குமரேசர்மனம் புகழ
நாகமதாய்ப்பட்சி மேவியே குன்றையில்
சரவணதீர்த்தந் தனில்வந்திறங்கிட வேட்டை

அன்னமதுபாரே தாரா
பின்னிவருநேரே
சன்னிதிதாவிட முன்னதிகூடவிட
சரவணத்தீர்த்தந் தனில்வந்திறங்கிட வேட்டை

வையாபுரிவரவே முரு
கையாதுணைதரவே
ஐய்யாரமாமயிலேறியேசேவகன்
உன்பாதமேகண்டு நம்பினேனென்று வேட்டை

விருத்தம்.

சிங்கனும் பட்சிபார்க்கச் செகம் புகழ் குன்றை நாட்டில்
அங்கமாய்க் குழுவன் வேட்டை யாடிய போது தானும்
தங்கமா மயிலு மன்னம் தாராவும் நாரை சேரும்
துங்கமாய்க் குழுவன் முன்னே தோன்றிடச் சிங்கன் சொல்வான்

குழுவனுக்குஞ் சிங்கனுக்கும் வேட்டைத்தரு

தர்க்கம்.

குன்றையம் பதிதனில் குமரேசர் வளர் நாட்டுங்
குழுவனே வேட்டைமுன்னே பட்சி
கூட்டமாய் வருகுது ஆட்டமாய்வேட்டைமுன்
கோறிநீபோராயே

குழுவன்

பாரென வுரைத்திடும் நேருள்ள சிங்கனே
பதியது தனிலிருக்க பட்சி
பறவைகள் வருவதை திறமதாய் என்னுட
பதியது வரவிடுவாய்

சிங்கன்

விடுவனென்று சொல்லுந் துடியுள்ள குழுவா நீ
வேட்டைகள் வெகு துருசு பட்சி
வேகமாய் வருகுது தாகமாய்க்குகனருள்
வேலவர் பதம் பணிவாய்

குறுவன்

பணிவெனென்றே சொல்லுங் களமுள்ள சிங்காஞென்
　　பன்னிருகை வேலர் அவர்
பாதமும் பணிந்திட நிறியாய் வேட்டைமுன்
　　பட்சியும் வருகுதிங்கே

சிங்கன்

இங்கேநீ வேட்டைசெய் வங்கணக்குறுவா மேல்
　　சராறனைப்புடையோன் மகிழ்
தேறிய சேவலும்மீறியே வருகுது
　　இதுகண்டு பணிவாயே

குழுவன்

மகிழ்வது கனநாடி வடிவுள்ள சிங்கனே
　　வங்கணமறவாதே பட்சி
வருவதைச்சன்னையாய்த் தருநடன் வரவிடு
　　வளர்குன்றை நாட்டினிலே

சிங்கன்

நாட்டினில் வளர்குன்றை நாட்டிகன்பாதத்தை
　　நம்பிடுங்குழுவனாரே பட்சி
நாடியே சரவணை யோடியே யிறங்குது
　　நாதனருளாலே

விருத்தம்

அரகரா முருகாவென்று அருள் குழுவனும்வேட்டை
திறமுடனேம்போது சீக்கிரம்பட்சியெல்லாம்
சரவணப் பொய்கையான சண்முகர் நதியில் தோன்றக்
காமிகுன்றை நாட்டுக் காவலர் வருகின்றாரே

வசனம் சுப்பிரமணிய சுவாமியினுடைய வாசல் காவலர்கள் பட்சிஜாதிகளைக்காவல் செய்யவருகிற விதங்காண்க

தரு.

　　காவலர் வந்தாரே குன்றை காட்டுக்
　　காவலர் வந்தாரே

காவலர்வந்தாரே பூவலாதிபன்
கந்தையன் பாதத்தைச் சிந்தையில்போற்றிட　　காவலர்

சித்திரமாகிய முத்தையன் சன்னதி
சிறுடன்காப்பது காவலர் காமென்று
　　பத்திரமாகிய கர்த்தன் சரவணைப்
　　பதிதனிலேயாகிய பட்சியைக்காத்திட　　காவலர்

நேமகாடாகிய குன்றுக்குடிமலை
நேர்த்தியாய்ப் பட்சி கார்த்திடக்கூடியே
பூமணவாசனை யானகுமரேசர்
பொற்பாதம் போற்றியே யெப்பவுங்காத்திடும்; காவலர்

நான்றுகைலாச வாசகனுகிய
தோகைசிவகாமிப் பாலனுலாவிய
மின்னும்வடிவேலர் பாதம்பணிந்திடும்
மேவியகுன்றை நகரதா காத்திடும் காவலர்

விருத்தம்

உத்தமமிழ் பரமகுரு பாதாகளுஞ்
சிந்தையிலே துதித்து நிதஞ் சேர்வையாகச்
சத்தமுடன் காவலர்கள் பணிந்து போற்றி
சுந்தரனுர் முருகனருள் துணையென்றெண்ணி
பத்தனுட் பாதமது பூசை செய்து
பன்னிருவேல் துணையெனவே பணிந்து போற்றி
அத்தனுட கிருபையினுல் மகிழ்ந்து நித்தம்
அன்புடனே பூசைசெய்து வரம் பெற்ருரே

விருத்தம்.

திருவளர் குன்றை நாட்டு தினம் வளர் காவலாளர்
தருவளர் பட்சிஜாதி தானது கூட்டம் பாராய்
குருவளர் குகனரன்னங் கொடுத்திடக் காவலாக
பெருவளரன்னதானம் பிரயலஞ் செய்குவாயே

வசனம் அகோ வாரும்பிள்ளாய் காவலர்களே சுவாமியினுடையகிருபையினுல் வேட்டையாடி பட்சிஜாதிகளெல்லாஞ் சரவணைப் பொய்கையில் விளையாடுகிறது சுவாமி அன்னங்கொடுப்பார் நீங்களும் பட்சிஜாதி களுக்குக் காவலாக இருங்கள் காவலர்களே

விருத்தம்.

கோதைதன்மயிலினளே குறவஞ்சிசொல்லக் கேளாய்
சோதை தன் மடியில் வாழுஞ் சுந்தரமுருகன் பாதம்
சாதையாய்த் திரிவேலங்குத் தழைத்திடுங் குடிமைக்காண
பாதையுமூவர் கூடிப் பாங்குடனடப்போம் வாராய்

வசனம் அகோ கேளும் பெண்ணே குறவஞ்சிகுன்றையம் பதியாகிய தலத்திற்கு முதல்மையானது திருவேல் நகரமானதால் நாமூவர்களும் திருவேல் நகரஞ் சென்று கந்த சுவாமியினுடைய பாதபூசை பண்ணிவரவேணும். வாரும் பெண்ணே குறவஞ்சி

தரு.

மங்கையே திருவேலன் வளர்குடி தனைநாடி
    வடிவேல் பதம்பணிய வாராயே மூவர்
    வடிவேல் பதம்பணிய

கங்கைசூடுஞ்சொக்கருங் காத்திடும்புவிவேலு
காதலனருள்வள்ளி நீதவான் எனையாளுந்
செங்கையால் தெளித்திடத் திருவடி மிதித்திடச்
செல்லவழியுஞ்சோலை நல்லவழியும்பாரேன்
    இதுவுமோர் மயிலேபாரே   மங்கையே

தலைமையாஞ்சூரனை சங்காரஞ்செய்தோனை
தாரணிவளரிஷி யோர்களும் பணிவோனே
பழமையாய்ப் பலதேவர் நிதங்கூடிவருமூவர்
பலவன்கரைபபாராய் தேனுறுஞ்சோலை வளமையதுவுநேராய்
    மயிலேவாராய் குன்றைநேராய்   மங்கையே

காளத்தியீசன்மகிழ் கந்தைபனிதம்வாழும்
கைலையங்கிரியாளும் குன்றைநகர்
பணியவெண்ணீறு தருவாளும் அன்றுதேவர்
ஆலத்தியெடுத்திடும் தெய்வப்பெண்ணாடித்திடும்
ஆலத்திநகர்பாராய் குன்றைநாட்டின் சாலைவழியும்வாராய்
    இதுவும்நேராய் சாலைபாராய்   மங்கையே

வேலையிட்டோன்குன்றை வேல்வனூட்டிலெங்கும்
வேட்டைசெய்தது நேராய் மயில்குயில்கள்
விளையாடுவதும்பாராய் அமரர்தேவர்
மாலையிட்டநகர் வேலவர் மகிழ்ந்தருள்
வளர்நகர்தனைப்பாராய் திருவேல்நகர் வளங்களுந்தங்கூராய்
    இதுவுநேராய் மகிழவாராய்   மங்கையே

மங்களகல்யாணன் வடிவேலன் மனமகிழ்
மலரடிநிதம்பணிய கந்தையன் தந்த
வளர்வெண்ணீறு நிதமணிய தீர்த்தமாடச்
செங்கழுநீர்ப்பொய்கை சீர்வனைத்தீர்த்தமுஞ்
சென்றுநானநியாடியே மலர்கள்சூடியே
    இன்றுநாம்வழிகூடியே விளையாடியே கும்மியாடியே வர

அன்பனுந்திருவேலர் நம்பினோர்க்கனுகூலர்
அடிபணிந்திட வாராய் சாலையுஞ்சோலை
வழிகடந்திடு நேராய் தீர்த்தமது
தென்புடன்தம்பிரானித் தீர்த்தமும்பாடிடத்

தெரிசனஞ்செய்யவாராய்சாலைபுஞ்சோலைவழிநடவெருநேராய்
இதுவும் பாராய் சாலைநேராய் மங்கையே

சித்திரமாகிய குமரேசர் பதநாடி
சிந்தையில் மகிழ்ந்தாடியே திருவேலநகர்
வந்துமுன்னி தங் கூடியே வளருநிதம்
முந்தையன்சன்னதி பத்திரகாளிதன்
முதன்மையதுவும்பாராய்வழிநடந்தால்மின்னதிருமதுநேராய்
மயிலேபாராய் இதுவுநேராய் மங்கையே

விருத்தம்.

வாசனைசேருங்குன்றை வடிவேலர் பாதநாளும்
பூசனை செய்து மூவர் புனிதமாய் நடக்கும் போது
தேசிகனருளால் நாளும் தேனாறு பெருக்குக்கண்டு
கோசிகனருளால் மூவர் கூடினீராடினாரே

வசனம் குழுவனும் சிங்கனுஞ்சிங்கியு மூவர்களும் குன்றை யம்பதிவிட்டுத் திருவேல் நகரம் வரும்போது தேனாறுபெருக்கமாக வெள்ளம்வருவதைக்கண்டு மூவர்களும் தீர்த்தமாடுகிற விதங்காண்க

தரு

காசினிவாழ்குன்றைத் தேனாற்றதிதனைப் பாரும் இதைக்
கண்டு தரிசித்தாலென்றைக்கும் பாவமும் தீரும்

பூசனைசெய்திட வேணுகாமூவருங் கூடியே வேலர்
பொற்பாதம் போற்றியே யெப்பவுமே விளையாடியே

தேவர்கள் தீர்த்தங்களாடிய தேனாறுபாராய் வேலர்
சீர்பாதம் போற்றி முன்னாடிக் கரையேற வாராய்

வாகுள்ள சரவணை வைகை தேனாறென்றுங் கூறும் குன்றை
வடிவேலர் பாதத்தை மறவாமல் நதிநீரில் வாரும்

பக்குவமாய்த்தீர்த்த மாடிக்கரைதனில் சென்றோம் ஓடம்
பரிவுடனடத்திய குகன்மார்கள் கூட்டமுங்கண்டோம்

விருத்தம்.

சந்தன வனமுஞ் சோலை சதிருடன் தேனாறு சூழுஞ்
சுந்தரன் பாதம் போற்றிச் சுமுகமாய் நதிநீராடி
யந்தணர் முனிவர் தேவர் அருள் முனிவோர்கள் கூட
கந்தனார் மகிழ் தேனாற்றுக் கரிமுகன் பூசை செய்தான்

வசனம் அகோ கேளும் பெண்ணே குறவஞ்சி நாமூவருந்தீர்த்தமாடிக் கூடப் ஏற வேண்டியிருப்பதால்தேனாற்றுவிநாயகரைப்பூசைசெய்ய தேங்காய் பழக்குடம்சாம்பிராணிசகலமானபுஷ்பங்களோடுங்கொண்டுவாரும் பெண்ணே

தரு.

வார்த்தைக்கமிர்தம் தானக்குறவஞ்சித்தேனே தேனூறு
தீர்த்தங்களாடித் தெரிசித்தோம் நாம்கரிமுகனை

குன்றைக்குடியானை யென்றைக்கும் நெஞ்சினில் நிதியே
குற்றங்கள்செய்தாலும் தீர்த்திடுவாரவர்கதியே

வண்டாடுஞ்சோலைசூழும் தேனூறு தீர்த்தமுமாடினோம் ஐயன்
மலரடிபோற்றி மகிழ்ந்து குறவஞ்சி பாடினோம்

தேனூர்விநாயகர் பாதாரவிந்தமுங் கூர்ந்துக்கோ குமர
தேசிகன்பாதத்தைச் சிந்தையிலே நித்தம் நேர்ந்துக்கோ

மானூறும்வள்ளி கணவன் வரந்தரவாருமே குன்றை
மாமலையானே துணைபாகவந்தென்னைக் காருமே ஐயன்

தேனூற்றுவிநாயகர் பொன்னடி போற்றுவாய் நாமும்
அந்திபகல் கதிர் வேலனைநித்தமும் வாழ்த்துவாய்

மெய்யன்வளர்திரு வேல்நகர் தன்னையுங்காத்தவா நாளும்
மென்மேலும் வாழ்வுதாய் நேமநாட்டுக்கலி தீர்த்தவா

கந்தன்பாதாம்புயம் கருத்தினில் நித்தந்துதித்திடும்
கனமாகியநாட்டுக்கரர்வழக்குத் தேவன் மதித்திடும்

எந்தநாளும்வளர் ஆண்டியப் பம்பலம் போகவான் நாமும்
ஏகியசன்னிதி கண்டால் மகிழ்ந்திடுந் தாகவான்

வேலவன்பாதத்தை நாளும்மறவாமல் போற்றியே கப்பல்
மேன்மையதாகவே பேறுவோங்கந்தனை வாழ்த்தியே

காலமுடன் கப்பற் காரர்களுமிங்கே வந்திட்டார்
கந்தசாமியும் மென்மேலும் வாழவும் வரமதுந்தந்திட்டார்

விருத்தம்.

கூடியே மூவரங்கு குணமுடன் தேனூர்தன்னில்
ஆடியே தீர்த்தஞ் செய்து ஆறுமா முகவர் வென்றே
தேடியே வேலர்பாதம் தெரிசனஞ் செய்துமன்னே
நாடியே ஓடக்காரர் நலமுடன் வருகின்றாரே

தரு.

தலைதனில் குல்லாவும் இடைதனில் தரித்தசல்லடந் தானணிந்து
மலைமகள் குகனருளால் தேனூர் வளரேறுங்குகன் தோன்றினனே

குழுவனுஞ்சிங்கனுமாய் நதிநீரில் கூடிய தீர்த்தங்களாடுகையில்
வழுவாதசொல்லுடையான் தேனூர் வளரேறுங்குகன்தோன்றினனே

வேலவாவுன்னடிமை நாகூர் மீருசாய்புக்கு நானடிமை.
ஆலத்தையுண்டவனே துணையெனஅருளேறுங்குகன் தோன்றினனே

இல்லல்லாவென்றுசொல்லிபாப்மாம்இருக்கியேசேர்ந்தங்கேசுருக்குடனே
அல்லாவைதொழுதுகொண்டு தேனூரருளேறுங்குகன்தோன்றினன்

விருத்தம்.

சோலமர்மயிலான் சிங்கிகுணமுடன் குழுவன் சிங்கன்
வேலவா துணையென்றெண்ணி வேண்டியே மீருசாய்பு
பாலகர் மூவர்கப்பல் பாங்குடனேறிடமேற
சாலவு நீருக்தேனூர் தன்னை நீகடத்திடாயே

சந்தவிருத்தம்.

சிர்தைமகிழ் கந்தாருன் சுந்தரமதானதிரு சீருடன் தேனூர் நதியாம்
செவ்வேயோகியருள் யோகி தவயோகி புவியாவர் சிருகணமேருவதனுல்
தந்தை தாயென்று கனவிந்தைபது சொந்தமென தானதுவுமேவுபுவியில்
தாரதரமதான சமுசார கடலாழமது தாண்டுவது வேண்டுவகை போல்
சந்தையது கூட்டமெனுஞ் சிந்தையில் துயர் நிருஞ்சாயுச்சியமுத்திமோட்சா
சாகராமு நீஞ்சு கடலாழமது பாருலகில் சாரிமனமதாறியாக
வந்தனையதாய் மூவர் வடி வேலர்துணை யென்று வளராறு நீஞ்சு மனதாய்
வாசனையதாய் மூவரேறி மனதுக் ரமுடன் வளராறு நீஞ்சுவதுவே

கப்பல்தரு.

ஏலயெலோ ஏலயெலோ தாதினு யேலயெலோ.

வாசனைசேர் குன்றை வடிவேலு தாதினு வடிவேலு யுந்தன்
மலரடியைத்தந் தெனையாளு
பூசனைசெய்வே னுனைநாளும் தாதினு யுனைநாளும் நிதமும்
போற்றினே னுன்வினைதீர்த்தாளும்

முடுகு.

தேங்காயுஞ் சூடமுங் தீபமு மேத்தும்
தேனூரு விநாயகர் பாதமே போற்றும்
தாங்காமல் வில்வமும் மலரங்கே சாத்தும்
தாளிணைவளர்குரும ரேசனை வாழ்த்தும்
ஓங்காளி பார்வதி யென்றோதியே போற்றும்
ஓநமசிவாய முருகேசனை வாழ்த்தும் ஏலேயோ

மண்டலத்தில்ப் புகழரசன் திவ்ய
மணவாளன் வள்ளி குகனேசன்
கண்டவர்க்குக் கருணை விசுவாசன் குன்றைக்
கதிர்வேலன் திவ்ய மலர்வாசன்

முடுகு.

ஓடங்கள் [illegible]த்திர மாடாமல் நில்லு
ஓவேலாவென்றசொல் நாவிலே சொல்லு
சாடாமலங்[illegible]காரு மேடொன்றுதள்ளு
சண்முகர் பாதத்தை மறவாமல் நில்லு
கூடாமல் ஆ[illegible]சுற்றி ஓடியே செல்லு
கூசாமலேவரும் பாசத்தை வெல்லு
நாடாளுங்குன்றைத் தேசிகன்பாதத்தை
நம்பியே கப்பலுந் தென்பாய் நடத்திடு ஏலேயோ

தாமரைமடல் மல்லிவேர் கொழுந்து முருகர்
தாளிணையைப்போற்றித் தான்மகிழ்ந்து
சோலைவளர் குன்றை நகர்புகழ்ந்துவேலர்
துணையடியை நாவில் நிதமகிழ்ந்து

முடுகு.

காற்றுவருகுது கூற்றுவன்போலே
கண்ணுக்குக் காணாமல் விண்ணுக்கப்பாலே
பார்த்துக்கொள் மகரமீன், பதுங்குமுன்னாலே
பன்னிருகை வேல்முருகர் பாதமுன்னாலே
ஆற்றுக்குள்ளேவழி மாற்றுக்களாலே
ஆதினமதாய்ச் சினிச் கண்ணாடியாலே
சேர்த்துக்கொள் சிக்கிரம் பார்த்துக்கொள் சுக்கான்
திருப்படா கப்பலதை சுருக்கிலே யிப்போ ஏலேயோ

குமரேசா வளருமுரு கேசர் திவ்ய
குருபரனே குன்றை யறுமுகனே
அமரேசர் பணிபு மலர்வாசா வுந்தன்
அடியிணையான் நாளுங் குடியெனை யாள்

முடுகு.

பொங்கிவருகுது தண்ணீர்மிகுந்து
பூநதியாறுதனை பாருமுன்னுகந்து
சங்குகளூழுது சன்யாசிக்காகும்
சாளக்கிராமங்கள் பூசைக்குமாகும்
பங்கமில்லாமலே சிங்காரத்தேகும்
பச்சைமால் மருகனுட பாதமுன்னாகும்
அங்கமிரு தெய்வப்பெ ணிங்குநிதமாகும்
ஆறுதேனாறுநதி பாருமனதாகும் ஏலேயோ

சித்தமுடன் தேனாறு கடலதுவே வளருஞ்
செந்நெல்லெங்கும் புவியில் விளைவதுவே

சுத்தமுடன் குமரர் பதமதுவே நிதமுந்
தொழுதவர்க்குக் கருணை வளர்நதுவே

முரிகு.

மிக்கானவோடமது முன்னே நடத்து
மேவியே பாவவினை வந்தால் கடத்து
யெக்காலங் குமரேச ரென்றேயடுத்து
யென்னளுமுலகத்தோர் வாழ்வார் திடத்தில்
அக்காலம் வள்ளிதெய் வானைகுகனிடத்தில்
அனுதினம் பணிந்தோட அக்கரை நடத்து ஏலேலோ

விருத்தம்.

தேவர்கட் கருணையாளா திவ்ய நல்வாசா நேசா
காவலா வேலா பாலா காங்கையா கதிர் வேற் கந்தா
ஆவலாய் தேனூர் தீர்த்தமாடி நற்கரையுஞ் சேர்ந்தோ
பாவலா வென்று பாதம் பணிந்தேன் வெண்ணீறு தாராய்.

விருத்தம்.

தோகைமாமயிலாள் சிங்கி சொல்மொழிதவறுமானே
தாகைபாய்த் திரிவேலன்கு தழைத்திடுங் குடியின் வேலர்
வாகையாய் பாலசாத்தி வள்ளலைப் பணிய ஞ்வர்
ஆகையால் பாதை நோக்கி அடர்ந்திட்டார் நடந்திட்டாரே

வசனம் அகோ கேளும் நாமூவரும் திருவேலர் பாததரிசனம் பண்ண இந்தப்பாதை நடப்போம் வாருங்கள்

தரு.

கூடிநடமயிலேகுன்றைக் குடியின் வேலவரடியிணைதொழக் கூடிநட

நாடியகுன்றையைத் தேடிநாம் கூடியே
நாதனருள் திருவேலனை வாழ்த்திடக் கூடிநட

தென்புடன் வேலவரும் திருவேல்நகர்
அன்புடன் வாழ்வாரும் நித
பண்புடன்கூடியே பாதைமுன்னடியே
அன்பனென் றுமே அய்யனைத்தேடியே கூடிநட

மல்லிகைப் பூச்சொரியுந் திருவேல்நகர்
மாநகராச்சரியம் நிதம்
சொல்லிய வாழ்குகன் வள்ளிமணாளனை
தோத்திரஞ் செய்துகண் ணேத்திரமாகவே கூடிநட

நேமநாடாதிபதி தேனூறு சூழும்
கோமனூர் மனதில் துதி நாளும்

பூமணத்தாசனை காமினிப் பூசனை
மாமலர் வாசனை வடிவேலர் பூசனை கூடிநட

சூரசங்காரம் சூரக் குடிநகர்
பேராகும் அருள் சிருள்ள மீனவன்
சொக்கேசர் தாகமும் சிங்கைதயிலே
எந்தநாளுங் கந்தன் கூடிநட

பத்தர்க்கனுகூலன் திருவேலர்
முத்தப்ப னம்பலவான் அன்ன
சத்திரமும் வில்வ பத்திரமும் வேலர்
ருத்திரமும் நாளுஞ் சித்திரமாய்க்காண கூடிநட

சாலைவழிநேரே திருவேல்நகர்
சோலைகளும் பாரே நிதம்
பாலைவனக்கிளி சோலைமயில்க் குயில்
பஞ்சவர்ணக்கிளி கொஞ்சிவிளையாடும் கூடிநட

விருத்தம்.

ஆடரவணிந்த பாலரருள் குமரேசா வென்று
நாடனுசேமாடு நலமுடன் திருவேல்வாழும்
தாடரத்திருவேலக்கு தழைத்தங்கு குடிசைக்காண
காடனு வலமதாகக் கண்டவர் மகிழ்ந்திட்டாரே

வசனம் மூவர்களும் சன்னிதியடுத்துவரும்பொழுதுகாடைவலங்கண்டு சந்தோஷப்பட்டு தோத்திரம் பண்ணுகிற விதங்காண்க

தரு.

சன்னதியைப்பாராய் தெரிசனஞ்செய்யச்
சந்தோஷமாய் வாராய

மின்னுங்கோபுரமதிலும் தி[illegible]தம்பம்
விளங்கிய கொடிமரமும் அதில் பொன்னுனை
வயிரத்தூண் போதிகைச் சவுக்கையும்
பொருந்திய குமரேசர் இருந்தென்றும் விளையாடும் சன்ன

சிரானவேலவராம் அனுதின
மாறுதகாவலராம் புவி
யேருளமாய்ப் பத்ரகாளிமுன் சித்திரம்
தாராளமாக்கோவில் நேராகத்தோன்றிடும் சன்ன

கண்ணன்மகனுராம் அரிகையினை வாரார் வளர்
மின்னனவேல்முரு கென்னுளமேமகிழ்
கண்ணனருள் சின்னக் காடையனுர் வாசம் சன்ன

தஞ்சமெனக்காரும் அருள் வஞ்சவினைத்திரும் நிதம்
கஞ்சமலர்க்குழல் கஞ்சாயிபம்மனும்
அஞ்சாமல் நாளுமுன் பஞ்சணைமேல்வளர் சன்ன

கனிகரமானசித்ரம் முத்தைய னம்பலவ அன்னசத்ரம் வெகு
புனிதமாகவே கனிகரமாகிய
புகழுங்குமரேசர் மகிழுந்திருவாசல் சன்ன

தேனுங்கனியாக நாவல் தென்னையுமுன்னாக வளர்
தோணு முனியப்பன்னன் நாளுங் கருப்பண்ணன்
சுமுகமாய் வேலர் முன்னனுதினங்காவல் செய் சன்ன

வாழுங் குமரேசன் குன்றை நக ராளுமகாராசன் அருள்
நாளுந்துணைமன தாலும் வடிவுடன்
வேலுநதிருவடி நாளும்பணியமுன் சன்ன

தோகைமயில் வாரும் உந்தனிரு பாதனிதந்தாரும் நிதம்
ஏகமாய் லோகம் மாகநிதம் வளர்
எம்பிரான் வாழ்குரு தம்பிரான் வாழ்கின்ற சன்ன

விருத்தம்.

மாதவா முகுந்தா கிருஷ்ணவாமனன்மருகா வுந்தன்
பாதமென்னாளும் போற்றிப் பன்னிருகைவேலா நாளும்
ஆதர வெனக்காா் குன்றை அய்யனே அரனே போற்றி
நாதனேவேதா நீதா ரட்சிப்பாய் போற்றி போற்றி

விருத்தம்.

கழுகுமாமலையா போற்றி கந்தனேக்கிர் வேல் போற்றி
மழுவுமான் தரித்தாய் போற்றி மாகிலம் புகழ்வாய் போற்றி
நழுவுதலில்லாம் நாளும் நாடிமே மனதிலென்று
குழுவனுஞ் சிங்கன் சிங்கிகூடியே பணிந்திட்டாரே

வசனம் திருவேல் நகரம் கந்த சுவாமி பாதத்திலே மூவரும் அருச்சனைபண்ணிப் பூசைசெய்கிற விதங்காண்க

பூசைத்தரு.

கந்தர்குகனேமுரு வந்தருளுவாய் இந்நாளுமே உந்தன்
சொந்தஅடிமைகள் வந்தோ நாம்மூவரும்ஆளுமே

வேதனயன்முதல் விண்ணோர்கள் காணாத பாதத்தை புவி
நாதன்துணையெனை ரக்ஷிப்பாய் முன்வந்த யோகத்தை

அண்டர்கள் போற்றிடும் குன்றைக்குமரனே நாடியே உந்தன்
அடியிணை போற்றினேன் குடியெனையாள் நிதம்தேடியே

கண்டவர்க்கமெனி வென்றைக்கும் வாராமல்காத்திடு மயில்
கந்தனே செந்தூரா வுன் பாதமே வைத்து சேர்த்திடு

முத்தையனென்ற சொல் சித்தமதில் நித்தங்கண்டதே ஆதி
மூலமுதல்ப்பொருள் ஆதாரமாய்நெஞ்சி லுண்டதே

வாழுந்திரு வேல்வளர்நகர் வேல்வன் பாதமே எந்த
நாளுமறவாமல் நாதனருள் நீதமே

அண்டர்க்களுகூலன் தொண்டர்க்கருளிய கர்த்தனே மன
தென்றைக்குஞ் சஞ்சலமில்லாமல் காத்திடுஞ் சுத்தனே

தோகைமயின்மே லேறியுலாவிய கந்தா மன
வேகமதாயென்னை யாள்வதுமுன்பாரந்தந்தாள்

மூலமுதற்பொருளாதாரமாகிய குருவே என்னை
யாளுந்தயாபரனாகியகற்பகத் தருவே

சித்தமதில் நிதம் பத்தர்க்களுகூலகர்த்தனே வள்ளி
தெய்வானையாளுடன் குன்றைமலைவளர் சுத்தனே

முத்தையனம்பலம் நித்தம் பணிகுன்றை வேலவா வுந்தன்
பத்தன் கவிசுப்ரமணியன் தமிழ்க்கு முன்னாளவா

தேவாதி தேவர்கள் யாவர்தொழு மனுகூலனே ஆதி
மூவர்களுமுனிவோர்கள் நிதம் பணிபாலனே

வந்தனையா வுந்தன் சொந்தவடிமைக்குத் தோணவே மயி
லேறியுல்லாசமதாகவிளையாடுங் காணவே

விருத்தம்.

தேவனே தேவா குன்றைச் செங்கனிவாயா சேயா
காவலனருள் வேல் வள்ளி கணவனே கதிர் வேற்கந்தா
ஆவலாயுனது பாதம் அனுதினம் பணிந்தோமூவர்
பாவலா வெமது முன்னிலைப் பவனிவந்தருள் செய்வாயே

கலித்துறை.

குருவேலு ஞானக் குழந்தையின் வேலு குன்றைமலை
வருவேலு வேலு வளர்சத்தி வேலு என் நாக்கில் வளர்
தருவேலு அன்னார்தருவேலு சூரன் தனை வதைத்த
திருவேலு வேலு திருவேல் நகர்வளர் தேசிகனே

வெண்பா,

வாசம் புகழ் முருகா வாக்கருள நாவில் நிதம்
பூசனையாயுன் பதத்தைப் போற்றினேன்—காசினியில்
கண்டேன் மனமகிழ்ந்தேன் காட்சிதாமுன் னெனக்கு
யென்றைக்குமாமுதிரு

விருத்தம்.

சரவணமுருகா சம்போ சதாசிவப்பொருளேஞான
அரவணி பாலா ஞானா அண்ணலே அரசர்கோவே
திரமுடன் திருவேலங்கு தினம் வளர் வேலர் முன்னில்
குறவள்ளி கணவர் வென்றி குமிமகிழ்ந்தாடினரே

கும்மித் தரு.

கும்மியடிக்கிறர் மனரம்மியமாகவே தான் கோவில்
கும்மி யடிக்கிறர்

கும்மியடிக்கிறர் ரம்மியமாகவே
கூடியசன்னிதி நாடிமுன்னகவே கும்மி

நீதா சரணமுந்தாள் அடியேனை
ரக்ஷித்து ஆள்வாயே நாதா
வுனதருள் வேலா பழிக்கஞ்சி
நாயகனே புவித் தாயகனே யென்று கும்மி

தோகைமயிலோனே திருவேலுந்தன்
பாதமறவேனே நாளும்
பூதலம் போற்றிய நாதா குமரேசா
பொற்பாதம் போற்றியேயெப்பவும் வாழ்த்தியே கும்மி

குன்றைக் குமரேசா குறமகள்
கண்டுமகிழ் வாசா உன
தண்டைக்குவந்தேனுன் என்றைக்குங் காத்திடு
சரவணபவனறு முகவேலா வென்றுதான் கும்மி.

சரவணைநதியாடி குறவஞ்சித்
தம்மை நான் கொண்டாடி
அரகரமுருகனே வரமதுதருவோனே
ஆறுமாமுகவோனே காருநீதுணையென்று கும்மி

ஆசையெனமகிழ்ந்தேன் அஞ்ஞான
பாசந்தனைத் தொலைத்தேன்நிதம்
ஓசைய தரிய வாசியை, நாட்டியே
ஓம்நமவென்ற சொல் நாவினில் பூட்டியே கும்மி

அப்பனே குன்றை நகர் கதிர்வேலு
மெப்பவு நான்மறவேன் நீயுஞ்
செப்பியவாய்மொழி தப்பாதயோகனே
சிந்தையிலே நிதம் வந்தெனையாளென்றும் கும்மி

சித்திரமாகியதேர் திருவேல்நகர்
பத்திரகாளியனும்

சிந்தையிலே மகிழ்ந் தெந்தனுளுந்தானே
சித்தமதாகவே நித்தந் துதித்தங்கே — கும்மி

விருத்தம்

தருவளர் புவியின் மேவு சரவணமுற்றனாரும்
குருவளர் குகனை யாதிக் குஞ்சரமுகனேயென்று
திருவளர் வேலாவுந்தன் சேவடி துதித்தேமூவர்
அருவளர் மயிலிலேறி அடியெமைக் காத்திடீரே

விருத்தம்.

தோகைமாமயிலாள் சிங்கி தொழுதவள் குழுவன்முன்னே
தாகமாய்க் குன்றை வேலர் தமிழ்க் குறவஞ்சி யாட
ஆகையாய்த் திருவேலான அருள்க் குடி வேலர் வாழும்
வாகையாயெனக்குத் தோன்றும் வகை யெனக்குரைத்திடீரே

வசனம் அகோ கேளும் குழுவா இந்த விடத்தில் திருவேலர் வந்தவகையை எனக்கு விபரமாய்ச் சொல்லிவாருங்குழுவா

விருத்தம்.

வஞ்சியே குயிலினுளே வளர் குயில் மாதே கேளாய்
கொஞ்சியே குறவஞ்சிபாடிக் கூடி நாமகிழ்ந்தோமூவர்
வஞ்சியே திருவேலான வளர் குடி வளமை யெல்லாம்
ரஞ்சிதமயிலே யென்று நலமுடன் குழுவன் சொல்வான்

வசனம் அகோ கேளாய் பெண்ணே இந்தத்தலத்தில் கந்தசுவாமி வந்த்வரலாறு சொல்லிவருகிறேன் கேளும் பெண்ணே

குழுவனுக்கும் சிங்கிக்கும் தர்க்கத்தரு

பெண்ணே நாமூவர்கூடிச் சன்னிதிதன்னைக் கண்டோம்
பெருமிதமாக நிதம் தருவாரனேகசெல்வம்
பேதகநினையாதே மாதே

தருவாரே யென்று சொன்ன மருமலர்க் குழுவனாரே
தவறாமல் வேலர் பாதம் மறவாமல் த்து திப்போம்
அவர் தம்மைமக்குருவாகவே நினைப்போம்

இருப்பவரென்று சொன்ன கருத்துள்ள மங்கையரே
இயலானகுமரேசர் வளமையைக் கேளாய்
அவர்மனமகிழவே வாராய்

வாருமென்றுரைத்தீரே நேருள்ளகுழுவனாரே
வளர்குன்றை வேலரிங்கே வந்ததைச் சொல்வாய்
திருவேல் நகரென்றும் பேராம்

போது மென்றுசொன்ன கூறுள்ளவஞ்சியாரே
பெருமிதக்குமரேசா வன்மையைக்கேளாய்
சூரனை வெற்றியர் பாராய்

பார்த்திடும் சூர னுடல் சேர்த்திடுஞ் சத்திவேலு
பன்னிருகைவேலென்று சொன்னையா குறுவாகின்று
பதிதிருவேல் நகர்சென்று

சென்றவன் சூரன்வேட்டை கண்டவன் வஞ்சியாரே
செல்லவேதேவர் மகிழ் சொல்லவே துணையென்று
திருவேல் நகரதுகண்டு

கண்டவர்க்கேகாட்சி சென்றங்கே குறுவனரே
கந்தனைப்பணியமுன் வந்தனைபுரிவாய்
அவர்மன மகிழ்ச்சியாய் வருவார்

வருவாரே திருவேலர் வளர்நகர் தன்னில் நித்தம்
வஞ்சியே குமரேசர் மலரடிபணிவோம்
அவர் நுனை நிதம் வெண்ணீறணிவோம்

அணிந்திடவென்று சொன்னகுறுவனே குன்றைநகர்
அய்யனைப்போற்ற மனதாகவே வருவாய்
குன்றையூர்ப்பதி தனக்கேக

ஏகியே அன்னதானமடமது வஞ்சியாரே
எப்போதுஞ் சென்று மகிழ்ந் தேகவேவாராய்
சிவசிவா சரணமுந்தாராய்

தாரமென்றே சொன்ன குறுவனே குன்றை நகர்
தன்னையே நோக்கி நட முன்னேநான்சொன்னேன்
மனமகிழ்ச்சியாய்த்தானே

வசனம்

வசனம் அகோ வாராய் குறவஞ்சி பலதேவர் கூடியதால் பல்வநகரமென்றும் தேவர்கள் மாலையிட்டதால் மாலையிட்ட நகரென்றும் தெய்வப் பெண்கள் ஆலாத்தியெடுத்ததால் ஆலாத்தி நகரென்றும் சூரன்தவம் செய்ததால்சூரப்பதியென்றும் சுவாமியுங்கையில் வேல்பிடித்து நின்றஇடம் திருவேல் நகரமென்றும் தேவாதிகள் பேரிட்டதால் இந்தத்தலத்தில் நாமும் சுவாமிதரிசனஞ்செய்து கொண்டோம் இந்தச் சன்னிதியில்நாமும் ஒரு கோலாட்டம்விளையாடிவிட்டுக் குன்றையம்பதிக்குச் செல்வோம் பெண்ணே

விருத்தம்.

சுந்தரமுருகாநாதா துணையடிபணிவேனீதா
கந்தனே குகனே வேலா காட்சிதந்தாள் வாய்பாலா
அந்தரதுந்துமிகள் நாளும் அடியிணைபணியவேதான்
வந்தவர்மூவர் கூடி வடிவேலரைப்பணிந்திட்டாரே

விருத்தம்.

இட்டமாத்திருவேலங்கு இயலுடனிருப்பார்
சட்டமாய் வேலர்பாதந் தாளிணை பணிந்து போற்றி
முட்டவே கோவில் சுற்றி மூர்க்கமாய் வலமதாக
அட்டமாசித்து நாவலடியிற் கோலாடினாரே

கோலாட்டத்தரு

அன்னமே வந்திடு சன்னதிசேர்ந்திடு
அய்யன் தன் வாசலில் கோலாட
கன்னன் மருகனே முன்னே பணிகுன்றை
கந்தனே யெந்தனை வந்தெனை யாளென்று — அன்ன

தாமரைபூக்குது மாமரங்காய்க்குது
தாழ்வில்லாச்செல்வமும் வந்தங்கே வாய்க்குது
மாமறையோர் வேதம் வாசலில் கேட்குது
மன்னர்பணி வேலர் முன்னிலே நாமுமா — அன்ன

சித்திரமாகிய பாகிய பத்திரகாளியை
சேவித்து மூவருந் தாவித்துதித்தங்கே
முத்தைதபனப்பல வானன்னசத்திரம்
முன்னிலே வாழ் நாவல் தன்னிலே நின்றிட — அன்ன

செங்கழுநீர்ப் பொய்கை வாசனைதோனுது
செல்வன் குமரேசன் பாதமே காணுது
மங்கள கல்யாணன் வாழுந்திருவேல்
மாமரஞ்சோலை வளர் நாவல் தன்னிலே — அன்ன

சின்னக்கடையனு நஞ்சரியி யாட்டமு
சேர்ந்திடும் பத்திர காளிமுன் கூட்டமு
வர்னத்துரைவடி வேலவனிஷ்டமு
வாழுங்குருந்தடி நாவல் முன்னாட்டமாய் — அன்ன

சரவணப்பொய்கையுந் தம்பிரான் தீர்த்தமுந்
தானுடுவோர் வினை நாடாமலோடுமே
பரமனே குமரனே அரகர முருகனே
பார்வதிபாலனே வேலனே போற்றிட — அன்ன

குன்றை நகர்ப்பதி கண்டவர்க்கே கெதி
கூறுந்திருவேலர் பாதமுமே அதி
அண்டர்புகழ் வள்ளி தெய்வானை பாகனே
அந்திப்பகலு மனுதினம் போற்றியே — அன்ன

வாருடனேவீர பாகுவைக் கண்டிதான்
வல்லவ் தேனுற்று விராய்காலென்றுதான்

ஏருவதேமன தாருவதென்றுதான்
எந்தனிடம்வள்ளி கந்தனைக்கண்டுதான் அன்ன

தீர்த்தங்களாடிட குறவஞ்சிபாடிட
தேசத்தாரெல்லாருங் கண்டுமகிழ்ந்திட
நாற்றிசைபோற்றும் வடிவேலைநாடிட
நாவல்குருந்தடி முன்னில் நாம்கூடிட அன்ன

வாசன் குறவஞ்சி யாடுவதும் சுப்ர
மணியன் தமிழ் முன்னுங் கூடுவதும்
நேசமதாய்விளை யாடுவதும் இந்த
நீணிலத்தோர் தமிழ்தேடுவதும் நிதம் அன்ன

தாகமதாய் ரிஷியோர்களை வாழ்த்தியே
சந்திரசூரியர் தன்னைநாம் போற்றியே
ஆகமதாய்வடி வேலரைவாழ்த்தியே
அந்திசெவ மனுதினம் போற்றியே அன்ன

கர்த்தனருளிய முத்தையனம்பலம்
கனவியவன்வாழன்ன சத்திரந்தன்னிலே
சித்தமாயன்னம் புசித்து மகிழ்ந்து
சிறந்து இருந்து மகிழ்ந்து விளையாட அன்ன

விருத்தம்.

மல்லிகை முல்லை வில்வம் மருமலர் வாசம் போன்ற
வெள்ளிமாமலையா வென்று வேலவர் பாதம்போற்றி
வள்ளிதெய்வானைபாகா வளர் குன்றை நகருக்கேக
அள்ளிவெண்ணீறுதாரா யையனே போற்றி போற்றி

விருத்தம்.

சூரனை வென்ற கந்த சுவாமியைத் தொழுது போற்றி
நேரினை யாக வந்தோம் நேர்த்தியாய்ப் போற்றி செய்தோம்
வீரனே திருவேலான விளங்குரல்நகரமென்று
கூறியே குன்றை நோக்கிக் குணமுடன் நடந்திட்டாரே

வசனம் கந்த சுவாமியை பணிந்து கொண்டு மூவர்களும் குன்றையம்பதியை நோக்கிவருகிற விதங்காண்க

தரு.

வஞ்சியேகுற மாது மங்கையே மாநகர்குன்றைக் கேகநீ வாராய்
கொஞ்சியமொழிபேசுமன்னமேகுன்றைநகர்தனைக் கண்டேன் மகிழ்ந்திட
கூடியே மனநாடியே வழிதேடியே மகிழ்ந்தாடியேவர வஞ்சி

சாலையும் வழிச்சோலையும் குன்றைச்
சாமிகுமரேசராலயங் கண்டே
சாடுவோம் நதியாடுவோம் விளையாடுவோம் தமிழ்பாடுவோநிதம்வஞ்சி

அன்னதான மட மங்கேகூண்கலாம்
அந்திபகலன்ன தானமு முண்கலாம்.
அன்னமிலே வளர்மின்னலே வழிதன்னிலே குன்றை முன்னிலேவா

தேனூர்நதியுங்தோணுது முன்னே
தேசிகன்றன்மலே காணுது சொன்னேன்
தேவியே மனமாகியே தங்கத்தூவியே குன்றைமேவியே பணி வஞ்சி

மின்னேபழனி யாயி ஊருணி
மிகவிளங்கும் வையாபுரிதன்னில்
மீறுது சாலே நெருது மனந் தேறுது குன்றைபாரிது கண்ணால் வஞ்சி

ராசனரண்மனைச சித்திரம் முன்னே
நாலுவீதி யன்னசத்திரஞ் சொன்னேன்
நங்கையே குற மங்கையே திவ்ய கொங்கையே மூவரிங்கையேவா

நேசன்பங்காரு தாசுவின்சத்திரம்
நேத்தியாயன்னஞ் சாஸ்திரதானதால்
நேருது சிவனுரது கதிர்வேலது நிதம்வாழுது வஞ்சி

குன்றைநகர் நாலு வீதியும்
குமரேசாவென்றே நாவிலோதியும்
வளர் கோள்சியே குறவஞ்சியே திவ்ய ரஞ்சிதமாகிய வஞ்சியரோம்

அன்னதானமுடமங்கே வந்ததே கும
ரையன்பாதாம்புயம் நிதமுமே தந்ததே
அன்றுதான் தெரியுண்டுதான் வரமின்றுதான் நமக்குண்டுதான் சொன்னேன்

கோபுர முன்னிலே அப்பன்
சிம்மாசின மீது தன்னிலே
வளர்இருப்பும் கொலுவிருப்பும் அவர்பொருப்பும் நாமவிருப்புமாக

விருத்தம்.

கருத்தை விட்ட கலாக்குன்றைக் கந்தனர் பாதம் போற்றி
திருத்தமாய் மூவர் கூடித் திருவடி தொழு நின்றார்
உறுத்தமாய் மூவர்க்கங்கு உகந்துமே காட்சிதந்து
திருத்தமாய்க் குன்றை வாசல் நீமகிழ்ந்திருந்திட்டாயே

விருத்தம்.

வெற்றிமயில் வேலவனே துணையென்றெண்ணி
வேலர் குறவஞ்சிதமிழ் விளங்கவேதான்
பத்தியுடன் குழுவனுமே சிங்கன்-சிங்கி
பாங்குடனே மூவர்களுமே பணிந்துசிற்கக்

சத்திவேல் மனமகிழ்ந்து மயிலிலேறிச்
சகலப்படைச் சேனைகளுஞ் சூழவே தான்
அத்திமுகன் தனக்கிளைய குன்றை நாதன்
அன்புடனே காட்சிகொடுத்தருள் செய்தாரே

வசனம் சுவாமியும் பத்தர்கள்மூவர்களுக்கும்வள்ளியம்மை தெய்வானை சமேதராய் மயில் வாகனத்தின் மீது வந்து காட்சி கொடுக்கிற விதங்காண்க

காட்சித்தரு.

காட்சிகொடுத்தார் கந்தசுவாமி காட்சிகொடுத்தார்
காட்சிகொடுத்தார் நல்ல ஆச்சரியமாக
கந்தனார்பாதத்தைக் கருத்தினில் துதித்தோர்க்கு காட்சி

கோலமாமயிலும் பன்னிருகை வேலுடனேயிலும்
சாலமுடனே குன்றைத் தலமன்ன மடமுன்னே
கோலமுடனே வந்த் குழுவன் சிங்கனுக்கு காட்சி

கணமுடன்மேவ தெய்வரம்பை மலரங்கேதூவ
குணமுடனேவந்த குழுவன் சிங்கனுக்கு
மனமகிழ்ந்திருவேலு மகிழ்ந்து புகழ்ந்து கொண்டு காட்சி

தேவருமகிழ புவியிலுள்ளோர் யாவரும்புகழ
மூவருமகிழ்குன்றை மூர்த்தி சண்முகநாதர்
பாவலர் தமிழோர்க்கும் பாடியே துதித்தோர்க்கும் காட்சி

தோகைபராடத் தெய்வானைவள்ளி மாதருங்கூட
யேகசிங்காசன மாகவே வாழ்ந்திடு
யெங்குமகிழ்வேலர் கங்காதரன்பாலர் காட்சி

காசினியோர்மகிழ்க் குறவஞ்சிக் கதைதனைப் புகழ
வாசனையாகிய வடிவேலர் மனமகிழ
பூசனைசெய்திடு புகழ்மூவர்க் கென்னுளுங் காட்சி

அன்னமாமடமுங் திருவேலென்று சொன்னபேரிடமும்
வண்ணமாம[illegible]லேறும் வடிவேலு பதங்கூறும்
நன்னகர்வ[illegible]தேடும் நாதன்குன்றை வேலன் காட்சி

விருத்தம்

சாலவே புவியுள்ளோர்க்குஞ் சகலரும் பணிந்தோர்க்கெல்லாம்
வேலவர்மகிழ்ந்து காட்சி வேண்டியவாமுமீய்ந்து
பாலகர் நீங்கவென்றும் பாருலகென்றுநும் வாழ்வீர்
கோலமா மயில்[illegible]ங்கே குழுவனுக் குறைசெய்வாரோ

வசனம் சுவாமியும் மயில்வாகனரூடராய் எழுந்தருளி வந்து காட்சி கொடுக்க மூவர்களும் சுவாமியைத் தோத்திரஞ் செய்கிற விதங்காண்க

விருத்தம்.

கருத்தை விட்டகலாக் குன்றைக் கர்த்தனார்பாதம் போற்றி
திருத்தமாய் மூவரங்கே திருவடி தொழுது நின்றார்
உருத்தமாய் மூவர்க்கங்கே யுகந்துமே காட்சிதந்து
திருத்தமாய்க் குன்றை வாசல் நீ மகிழ்ந்திருந்திடாயே

விருத்தம்.

வழுதிசேர் குன்றை வாழும் வங்கணக் குழுவனன்று
முழுதினு முனதுபாத முத்திதந்தாள்வா யென்று
பழுதில்லா மனதில் நாளும் பணிந்திட் வரங்கள் தந்தாள்
தொழுதவன், பணிந்து நின்று தோத்திரஞ் செய்யலுற்றான்

வசனம் மூவர்களும் சுவாமியைத் தோத்திரஞ் செய்கிற விதங்காண்க

பூசைத் தரு.

சுந்தரமுருகன்குன்றைக் கந்தனேவேலா உந்தன்
சொந்தடிமை யென்று நிதம் வந்தேனையாளு
கந்தனே குகனேவள்ளி கணவனே நாளும் சிந்தைக்
கருத்தினில் துதித்தே முத்தி தந்தேனையாளும்

ஆறுமாமுகவா துணை நீயெனக்காரும் உந்தன்
அடியிணைபணிந்தேன் வினை தீர்த்திடவாரும்
வேறுவினை வாராதுந்தன் பாதமே தந்தாள் வெற்றி
வேலவனே புள்ளிமயி லேறியேவந்தாள்

தேவனர்க்கருணையாளா வேலவாசுவாமி உந்தன்
திருவடி துதித்தோர்நாளும் வாழ்வரேபூமி
ஆவலாயுனதுபாதந் தந்திடநாளும் உந்தன்
அடியிணை பணிந்தே நிதம் வந்தேனையாளும்

முத்தையனே என்று சொல்லு நித்தமுங் காணும்உந்தன்
பத்தனுநானென்று நிதம் சித்தமே தோணும்
கர்த்தனேகுகனே குன்றைக் கந்தனே வாராய் என்னைக்
காத்திடவும் வேணே நல்ல கருணைமும் பாராய்

கோலமாமயிலேறும் வேலவா சுவாமியென்று உந்தன்
குழுவனுமே இங்கன் சிங்கி நிதமுமே வந்தோம்
சாலமாக் குறவஞ்சித் தமிழுந்தான் போற்றக் கவி
தாசன்சுப்ரமணியன் தமிழ் லோகமுமே வாழ்த்த

அன்பார்மகிழ் குன்றைநக ரையனேவாரும் உந்தன்
அடியிணை பணிந்தேனென்னை வந்தெனக்காரும்
மண்டலம் புகழுங்குன்றை வள்ளிமணளா உந்தன்
மலரடிபணிந்தேன் வரந் தந்தென்னையாள்வாய்

விருத்தம்.

அரிகர முருகா சரணஞ் சரணங் குமரா முருகா சரணஞ் சரணம்
வரமரு திருவாய் சரணஞ் சரணம் வடிவேல் முருகா சரணஞ் சரணம்
திருமுனதடியார் சரணஞ் சரணம் திருமால் மருகா சரணஞ் சரணம்
குறமகள்மருவா சரணஞ் சரணங் குன்றைம்பதியாய் சரணஞ் சரணம்

விருத்தம்.

கனமதாய் வேலர் பாதங் கருத்தினிற் போற்றி நிற்கத்
தினமதாய்க் குறவன் இங்ஙன் இங்கியுங் காட்சி பெற்று
தனமதாய் வேண்டு செல்வத்திட மகிழ்ச்சியாக
மனமதாய் வேலர் பாதம் வணங்கியே பூசை செய்தார்.

விருத்தம்.

சுத்தனே யமிர்தனான கந்தனன் பாலவேலா
பத்தனுமனது பாதம் பணிந்திடக் கிருபைதந்தான்
அத்தனார் மகிழுங் குன்றை யருள்வள்ளி கணவ வென்று
நித்தநற் பூசை செய்ய நீ மகிழ்ந்தருள் செய்வாயே

தரு.

கந்தா வுனைத் துதித்தேனுன் துணையெனக்கு
வந்தாள் வதிந்தநேரமே — கந்தா

பந்தாவமிர் தருணைத் தந்தாள் மனதில்நிதம்
வந்தாள் கருணை தர உன் தாள் அணையெனவே — கந்தா

நின்றேன் திருவடியைக் கண்டேன் சிரசில்மீது
கொண்டேன் மயில்பவனி சென்றேயடியார் முன்னே — கந்தா

தேனேயமிர் தருண மானே புவியதனில்
கானேயுலகில்வளர் கோனே மறந்திலனே — கந்தா

தோகைமயில்வளரும் யோகா கருணைவள்ளி
பாகா என துமுன் ஏகவர மருளும் — கந்தா

வேதா அடியென்முன்னே வாதா வரவுனது
பாதாரவிந்தமெனக் காதாரம் நீயல்லாது — கந்தா

வல்லாவினைதுரத்தி யெல்லாமுனதுபதி
அல்லால் மனதிலின்றி யெல்லாமுனதுகெதி — கந்தா

விருத்தம்.

சித்தியாய்க் குன்றை வாழுஞ் சிவசத்திவேலர் பேரில்
பத்தியாய்க் குறவஞ்சி தன்னைப் பாடினோராடினோர்க்கு
முத்தியாய்க் குன்றை வாழு முருகையன் மகிழ்ந்து நித்தம்
வெற்றியாய் வேண்டுசெல்வம் வேண்டியங் கொடுத்திட்டாரே

விருத்தம்.

நாடியே குழுவனங்கு நலமுடன் வெண்டிசெல்வம்
கூடியே வந்த தென்று குமரனைத் தொழுதுபோற்றி
தேடியே குன்றை வாசல் நினைமகிழ்ந்திருக்கவேதான்
ஆடியார் னர்த்தமாக ஆனந்தக்களிப்பைச்சொல்வான்

சிந்துக்கரு.

வரவேணு மயில்மீதிலேறி குன்றை வடிவேலர் குமரேசா
வந்துகண் பாரீர் வரவேணும்

குறமகள் மணவாளனை குன்றைக்
குமரேசா தருணமுன் மயில்மீதில்தோண வரவேணும்

நாடெங்கும் புகழ்கொண்டசூரா குன்றை
நாதனே குமரேசா தருணமுன் வாராய்
ஆடநற்கருணை யொளிதரவே முருகு
கையனே குமரகுரு ஐயனே வரவேணும்

சித்தாந்த முத்திமுதல் வரவே அருள்
தேசிகா குமரகுரு சிர்பாதந்தரவே
பத்தருக்கனுகூலனை குன்றைப்
பரமனே சிவஞான பாலன்முன்தோண வரவேணும்

குமரேசா குன்றைநகர் வாசா கதிர்வேல்
கோணதமயில்வள்ளி குகனாறு முகநேசா
பரமனே சிவஞான வொளியே சத்தி
பார்வதியாள் பாலனெனு மருளும் விளக்கொளியே வரவேணு

நகரெங்கும் பூமலர்கள் வாசம் அடியார்
நாடினோர்க்கனுகூல மானவிசுவாசம்
மகரங்களாகவே தோண பச்சை
மால்மருகனெனப்புவியோர் பாதமது காண வரவேணும்

புலவனெனுங் குமரனைப் நினையே குன்றைப்
புவியில்வளர் சண்முகவேல் தாள்பாதந்துணையே
தலைவனெனுஞ் சுந்தரமுருகா கந்த
சாமிதுணை மனதில் நினை அஞ்சமால்மருகா வரவேணும்

நலமுடனே நேமநாட்டிருப்பு துயரம்
நாடாமலோட்டிவிட வுன்மனம் பொறுப்பு
தலமுடனே குறவஞ்சி சொன்னேன் துணை
தந்தாளுமுத்தைய னம்பலவான்முன்னே வரவேணும்

அகஸ்தியனார் பூசைசெய்த தேனாறு தீர்த்தம்
ஆடியேபூஜைசெய்தால் மகத்துவமுந் தாறும்
பகன்தரப்பிர்வந்து குதித்தார் குன்றைப்
பாலனையனுதினமு மறவாதுதித்தார் வரவேணும்

சரவணத் தீர்த்தமுமாகும் குன்றைச்
சண்முகன்பாதத்தைமறவாமல்காகும்
குரவனே குறவள்ளி கணவான் அன்னவன்
சேவித்திடப் பிரபலமதாகவருந்தனவான்

விருத்தம்.

பெருமிதஞ் சேர் குன்றைவளர் க்ஷேம நாட்டுப்
பிரபலத்தைச்சொல்லமகிழ்ந்தருளல்லாரும்
தருமமதுதவறுமஞ்சிமையாக
சத்தியமுந்தவறுதென்றுநு நாட்டின்
கருங்கலு வர்தாலும் விலகிப்போகும்
காசினியில் யாவர்களுங் கந்தா வென்றும்
உரிமையுட னமிருக்கு க்ஷேமநாட்டி
லண்மையுடனுமிருந்து பூசைசெய்வோம்

வசனம் அடீ! கேளாய் பெண்ணே குறவஞ்சிகுன்றையம்பதியிலுள்ள கந்தசுவாமியிருக்கும்க்ஷேமநாட்டின் வளம் சொல்லி வருகிறேன் குறவஞ்சி

நாட்டுவளத்தரு.

ஆதிபருனை ஐந்து சோதிவடிவுள்ள நாடு சும
ரையன்பாதபப்புய மெய்யெனவாழ்ந்திடு நாடு

ஓதியவேதமுன் ஓதிய தேவர்கள் நாடு அரி
ஓம் நமோவென்றதொல் நாவினுணர்ந்திடு நாடு

சோதியெனுமன்னன் சொக்கேசர் வாழ்கின்ற நாடு சிவன்
சுந்தரன்பாதம் துணையென்றுபோற்றிய நாடு

நிதிகரும்படைத்தார்கள் நகைவர்கள் நாடு குன்றை
நித்தந்திருவேலர் கார்த்தின் மகிழ்ந்திடு நாடு

அன்புடன் ராசர்கள் தென்புடன் மணமகிழ் நாடு திரு
வாகியலெட்சுமி பெண்ணுளும் வாழ்கின்ற நாடு

தென்புடன் குன்றைக் குமரர் மகிழ்கின்ற நாடு வளர்
சிகேசனி யெங்காளுநூமாறுமிருக்கின்ற நாடு

பண்புடனன்ன சத்திரத் தவறாத நாடு குன்றைப்
பதிவளர் குமரேசர் திருவேலர் வளர்கின்ற நாடு

நண்டபடனே சேமநாடாகிய நாடெனு நாடு அருள்
நாதன் தேனுற்று விநாயகன் வாழ்கின்ற நாடு

செல்விதேவியாள் நல்விதமாய் வாழ் நகரம் ராசர்
செங்கோலுக்கென்னாளும் அஞ்சாதிருக்கின்ற நகரம்

விதமாகக்குமரனைப் போற்றிய நகரம் சேம
டவர்முக்கியம் நாட்டார் மகிழ்கின்ற நகரம்

நாடுநகரமுன்னுகைவளர்கின்ற நாடு இதில்
நாமளிருந்து மகிழ்ந்து விளையாட வாரும்

விருத்தம்.

உத்தமனே குன்றை வளர் சேமநாட்டில்
உகந்திருந்து வேலர் குறவஞ்சியாட
பத்தனுகாமென்று கந்தன் மனதில் தோன்றும்
பன்னிருவேல் துணையுமுண்டு பாரிலென்றும்
சித்தமுடனுமிருக்கு சேமநாட்டில்
செயமெனவேயிருந்து சிவனருளால் நாளும்
அத்தனுட திருவைபயினுல் குறவஞ்சி தன்னை
யஞ்சினமுந்துதிக்க வருமருள் செய்வாயே.

விருத்தம்

புத்தியுந் தருவாய் கந்தா பூதலமகிழ்ந்துபோற்றப்
பத்தியாய்க்குறவஞ்சி பாடிபாடினுமகிழ்ந்துன்பாத
மெத்திசைபுகழ நாளும் எழுந்து முன்னடியேன் முன்னில்
அத்திசை மயிலிலேறியடியேனைக் காத்திடீரே

தரு.

துணையெனக்கருள்புரிவாய் சிவ
சுந்தரன்மகனே நீ கந்தனே யனுதினம் துணை

மனமது துணையெனக் கூடியே குற
மகளைநீமணஞ்செய்யநாடியே புவி
யரசர்கள் யாவர்கள் தேடியே உன
தடியார்கள் பணிந்திட வரமதுதந்திட துணை

அமரர் சிகாமணிகளாகவே சூர
னனுதினம் மயிலெனக் கூவவே சமர்
செய்யும் வேலனுந்தாவவே சூர
சங்காரனருள் சிவ கங்காதரனே நீ துணை

வேலெனும்புவி சத்தி வேலனே யருள்
விண்ணவர்மகிழனுகூலனே தாயெனும்

9815

பராசக்தி பாலனே — உன
தடி பார்களிட்டு திர மயிலேறிவிளையாட — துணை
ரஞ்சிதமுடன் வணங்குவே — குற
வஞ்சியின் தமிழ்விந் தாடியே — பிர
பஞ்சமும் புவியாவுந் தேடியே — உன
தஞ்சமுமென மகிழ்ந்தாடியே நாடியே — து

விருத்தம்.

காரணன்மருகா குன்றை நாதனே வேதகிதா
பூரணமாகவுன்றன் பொன்னடிபணிந்து நின்றேம்
காரணமானகந்தாகனமுடன் குறவஞ்சி முற்றும்
வாரணமுகத்தோன்முன் னூமகிழ்ந்து நான் வாழிசொல்வேன்

தரு.

வாழிசொல்லுறேன் மகிழவாருங்கள் — குன்றைவேலு
வாழ்த்தியவுதினம் போற்றி வாழியே
காளிகங்காளி தேவிபராசக்தி — குன்றைவாழும்
கந்தனேயுந்தன் பாதம் வாழியே
தோகைமயிலிலேறுங் கந்தனே — தெய்வானைவள்ளி
சொந்தடிமை நாம் வந்தோம் வாழியே
தாகமுடன்திருவேலர் வாழியே — பத்ரகாளித்
தாயேயுனதுபாதம் வாழியே
தோகைமயில் வளர் வேலர் வாழியே — கவிஞோர்பாதம்
துதித்தென்னுளந்துணையே வாழியே

விருத்தம்.

வெற்றிமயிலேறு குன்றைக்குமாரகந்தா
வேலர்குறவஞ்சி தமிழ் விளங்கவெங்கும்
பத்தியுடன் போற்றி செய்தேன் வேதம்வாழ்த்தி
பன்விருதை வேலெனவே பாடி யேத்தி
அத்திமுகன் றனக்கிளையபழனிவேலு
அய்யனே யுன்னருளாலடியே னென்றும்
சத்தியகான் குறவஞ்சித் தமிழைநன்றாய்
சமுகமுடன்வாழியெனத் துதித்தேன்முற்று

குன்றைநகர்க் குறவஞ்சி

முற்றிற்று.

11872

9815